# வானவில்

# VAANAVIL

| இதழ் 111 | பங்குனி 2020 |
|---|---|
| ISSUE 111 | MARCH 2020 |


# உலகப் பேரழிவை ஒன்றுபட்டு முறியடிப்போம்!


உலகம் முழுவதையும் அழிக்கும் 'அரக்கனாக' கொரோனா வைரஸ் என்ற ஆட்கொல்லி கிருமி ஊழித்தாண்டவம் ஆடுகின்றது.

முடிசூடி ஆண்ட அரச பரம்பரையிலிருந்து ஒருபிடி சோற்றுக்கு வழியில்லாத பரதேசி வரை இந்த கொடிய வைரஸ் தன் கைவரிசையைக் காட்டி வருகிறது. பணக்காரன் ஏழை என்ற பேதம் இல்லை இந்த வைரசுக்கு. முதலாளி தொழிலாளி என்ற பேதமும் இல்லை. செல்வந்த நாடு ஏழை நாடு என்ற பேதமும் இல்லை. படித்தவன் படிக்காதவன் என்ற பேதமும் இல்லை. வல்லரசு நல்லரசு என்ற பேதமும் இல்லை. இப்படி உலகை சமனப்படுத்திய எந்தவொரு நிகழ்வும் இதற்கு முதல் உலகில் தோன்றியதில்லை எனத் துணிந்து கூறலாம்.

இன்று இருப்போர் நாளை இருப்பாரா என்ற நிச்சயமற்ற நிலை ஒவ்வொரு மனிதர் முன்னாலும் எழுந்து நிற்கிறது. முன்னர் எல்லாம் வயோதிபம் காரணமாகவோ அல்லது தீராத நோய் காரணமாகவோ மனிதர்கள் தமது ஆயுளின் முடிவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் இன்று இந்த நிமிடம் பிறந்த குழந்தையிலிருந்து நூறு வயதைத் தாண்டிய வயோதிபர்கள் வரை தமது ஆயுள் முடியப்போவதை எதிர்பார்த்திருக்கும் அவல நிலை.

இந்த நோய் சீனாவின் வூஹான் நகரில் கடந்த டிசம்பரில் முதன்முதலாக இனம் காணப்பட்டது. இது இயற்கையாகத் தோன்றியதா அல்லது எங்காவது மனிதர்களால் தீய நோக்கோடு உருவாக்கப்பட்டு பரப்பப்பட்டதா என்பது இன்றுவரை கண்டறியப்படவில்லை.

ஆனால் சீனா மீது நீண்டகாலமாக காழ்ப்புணர்வு கொண்டிருந்த



அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான மேற்கு நாடுகளும் சீனாவே திட்டமிட்டு இந்த வைரசை பரப்பியதாக ஏழுந்தமானத்துக்குப் பிரச்சாரம் செய்தன. இந்த கொள்ளை நோயுடன் சீனப் பொருளாதாரம் சரிந்தது, சீனாவின் கதை முடிந்தது என ஆர்ப்பரித்தன. இனி ஜென்மத்துக்கும் சீனா தலைதூக்க முடியாது எனக் கொக்கரித்தன. சீனா மீது இந்த நாடுகள் கடுமையான வன்மம் கொள்வதற்குக் காரணம் என்ன?

சீனா ஒரு சோசலிச நாடு, அந்த நாடு தமது நாடுகளிலும் சோசலிசத்தைப் பரப்பி தாம் கட்டிக்காத்து வரும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்புக்கு சமாதி கட்டிவிடும் எனப் பயந்து ஆரம்பகாலத்தில் சீனாவை இந்த நாடுகள் எதிர்த்தன. ஆனால் சீனா பொருளாதார ரீதியாக உலகின் இரண்டாவது சக்தி வாய்ந்த நாடாக உருவாகி முதலாளித்துவ சமூக அமைப்பை விட சோசலிச அமைப்பு மேன்மையானது என்பதை நிரூபித்த பின்னர், சீனாவை எப்படியும் வீழ்த்தி தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேணடும் என இந்த நாடுகள் கங்கணம் கட்டிச் செயல்பட்டன.

சீனாவுக்கு எதிராக பல்வேறு விதமான சதி சூழ்ச்சிகளில் ஈடுபட்ட இந்தநாடுகள் அவை எல்லாவற்றிலும் தோல்வி கண்டபின்னர், ட்ரம்ப்பின் அமெரிக்கா சீனாவை மடக்குவதற்கு வர்த்தக யுத்தத்தில் இறங்கியது. அதுவும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் சீனாவின் வூஹான் நகரில் கொடிய கொரோனா வைரஸ் பரவி பல்லாயிரக் கணக்கானோரைப் பாதித்ததுடன், மூவாயிரத்துக்கு மேற்பட்டோரைப் பலி கொண்டது. இந்த வைரஸ் சீனாவை உலுப்பிக் கொண்டிருந்த வேளையில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான மேற்கு நாடுகளும் மனிதாபிமான ரீதியில் சீனாக்கு உதவுவதைவிட்டு கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. சீனா இறுதி மூச்சு விடுவதைப் பார்ப்பதற்கு அவை ஆவலுடன் காத்திருந்தன.

ஆனால் நவ சீனத்தின் சிற்பி மாஓ கூறியதைப் போல, 'சூறைக்காற்றையும் ஆர்ப்பரிக்கும் கடலலைகளையும்' எதிர்த்து சீன மக்கள் ஒரு மனிதனாக

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# வைரஸ் நெருக்கடிக்குள் உலகம்

கொரோனா வைரஸ் (கோவிட் 19) தொற்று, இருநூறுக்கு மேற்பட்ட நாடுகளில் பரவி, உலகெங்கிலும் நாளுக்கு நாள் மரணங்கள் அதிகரித்து வருகின்றன. அதனால் இந்த இதழில் (வானவில் 111) கொரோனா பற்றிய கட்டுரைகளும் செய்திகளுமே அதிகம் வெளியாகியுள்ளன. இது தவிர்க்க முடியாததும் கூட. உலகமே கொரோனா வைரஸைக் கண்டு நடுநடுங்கிப் போயுள்ள நிலையில், எமது இந்த இதழின் பிரதிபலிப்பும் கொரோனா வைரஸ் பற்றியதாகவே இருக்க முடியும்.

முழுமையாக உயிர் பெறாத ஒரு அரைகுறை உயிரி தான் வைரஸ் எனப்படுகின்றது. பொதுவாக உயிரினங்களுக்கு டி.என்.ஏ (DNA) இருப்பது மாதிரி வைரஸ்களில் இருப்பது டி.என்.ஏயின் அரைகுறை வடிவமான RNA. புரதம் (protein) மற்றும் கொழுப்பு சேர்ந்த உறையினுள் அந்த RNA இருக்கும். அந்த உறையின் (alcohol கொண்டசனிரைசரின் துளிகள் அல்லது சவக்கார நுரை பட்டால் இந்த உறை எளிதில் கரைந்து போய்விடும்) மேற்பரப்பில் துருத்திக் கொண்டு ஆங்காங்கே முட்களைக் கொண்டதுதான் கொரோனா வைரஸ். புரதத்தாலான இந்த முட்களின் வேலை எளிதாக எதிலும் ஒட்டிக் கொள்வதே. கொரோனா வைரசில் இந்த முட்கள் பார்ப்பதற்கு கிரீடத்தில் (crown) இருக்கும் வேலைப்பாடு போல இருப்பதாலேயே இந்த வைரஸ் கொரோனா வைரஸ் என அழைக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸால் தாக்கப்பட்டவர்களைக் குணப்படுத்த இதுவரை எந்தவித தடுப்பு மருந்தும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த வைரஸ் ஏறத்தாள 70 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறியப்பட்ட போதிலும், மனிதர்களிடத்தில் பரவியிருப்பது முதன்முதலாக கடந்த வருடம் டிசம்பர் மாதம் சீனாவின் ஹுபெய் மாகாணத்தைச் சேர்ந்த வூகான் நகரில் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பின்னரே இதற்கான தடுப்பு மருந்து தயாரிப்பு தொடர்பான ஆய்வுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கைகளை சனிரைசர் (sanitiser) அல்லது சவக்காரத்தால் கழுவி எப்போதும் சுத்தமாக வைத்திருத்தல், வாய்ப்பகுதியை மூகமூடியால் மூடிக்கொள்ளுதல், இருமும்போதும் தும்மும்போதும் மூக்கு மற்றும் வாய்ப்பகுதியை மூடிக்கொள்ளுதல், ஒருவருடன் குறைந்தது ஒன்றரை மீற்றர் தூரத்தில் விலகி இருத்தல், சமூக முடக்கம், தனிமைப்படுத்தல் போன்ற பரிந்துரைகள் கொரோனா வைரஸ் பரவாமலிருக்க வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய புள்ளிவிபரங்களின்படி தொற்றுக்குள்ளான 100 பேரில் குறைந்தது 5 பேராவது இறந்து விடுகிறார்கள் என்ற நிலைமையே உள்ளது. உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தை வகிக்கின்றது. ஆனால் உயிரிழப்பில் இத்தாலி முதல் இடத்திலும் ஸ்பெயின் இரண்டாவது இடத்திலும் உள்ளது. எனினும் உலகில் அமெரிக்கா உட்பட பல நாடுகள் இதுவரையில் கொரோனா தொற்று தங்கள் நாட்டில் உச்சத்தைத் (Corona peak) தொடவில்லையென்றே கூறுகின்றன. அமெரிக்காவில் பல மில்லியன் கணக்கானோர் பாதிக்கப்பட்டு, இரண்டு இலட்சம் பேராவது இறக்க நேரிடலாமென அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பல நாடுகளில் மருத்துவர்களும் தாதிகளும் இரவு பகலாக கொரோனா நோயாளிகளின் உயிர்களைக் காக்க போராடி வருகிறார்கள். தீவிர சிகிச்சைப்பிரிவில் (intensive care unit) அனுமதிக்கப்பட வேண்டியவர்களுக்கேற்ப போதிய தீவிர சிகிச்சைக்குரிய படுக்கைகளில்லாத நிலைமை பல நாடுகளில் எழுந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்று வயதில் முதிர்ந்தவர்களையும் உடல் நலம் சரியில்லாதவர்களையுமே அதிகம் தாக்குகின்றது. நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பல மடங்காகப் பெருகி வருவதால், வயதானவர்களைக் கைவிட்டு இளவயதினரையே காப்பாற்ற வேண்டுமென்ற நிலைமையே உலகெங்கிலும் படிப்படியாக உருவாகி வருகின்றது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க, இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளன. அதேபோல விமானம், கடல் மற்றும் தரைவழியான போக்குவரத்துகளைக் கட்டுப்படுத்தியோ அல்லது முற்றாக நிறுத்தியோ தங்கள் நாட்டின் எல்லைகள் ஊடாக தொற்று பரவாமலிருக்கு முன்னேற்பாடுகளை செய்திருக்கிறார்கள்.

சிறிய – நடுத்தர – பெரிய உணவகங்கள், விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் கோடிக்கணக்கான மக்கள் வேலைகளை இழந்தும் வருமானமின்றியும் தவிக்கிறார்கள். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் போலன்றி, வறிய நாடுகளால் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமூக உதவிப்பணம் வழங்க முடியாது. பாடசாலைகளும் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் தலையங்கத்தை எழுதி முடிக்கையிலுள்ள (ஏப்ரல் 4ந் திகதி) நிலவரப்படி, உலகம் முழுவதும் 11 இலட்சத்து 88 ஆயிரத்து 489 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 64 ஆயிரத்து 103 பேர் மரணத்தை தழுவியுள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கைகள் மருத்துவமனைகளில் மாத்திரம் பரிசோதிக்கப்பட்டவர்களை அடிப்படையாகக் கொண்டது. அதாவது இந்த எண்ணிக்கைகள் நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கைகளில் ஒரு பகுதி மட்டும்தான். ஏனெனில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படாமல் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களும் இறந்தவர்களும் இருக்கிறார்கள். அவ்வாறு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின், இறந்தவர்களின் கணக்கு எவரிடமும் இல்லையென்றே கூறப்படுகின்றது. மருத்துவமனைகளுக்கு அப்பால் எவருக்கும் நோய்த் தொற்றுப் பரிசோதனை செய்யப்பட்டதாகக் கூடத் தெரியவில்லை. எனவே தொற்றுக்குள்ளானவர்களாகக் கண்டு பிடிக்கப்பட்டவர்களும், தொற்றுக்குள்ளானார்களாவென இதுவரையில் பரிசோதிக்காதவர்களும், தங்களைத் தாங்களே தனிமைப்படுத்துவதே, இந்த கொடிய நோயிலிருந்து தப்பிப்பதற்கு ஒரேயொரு வழி.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# கொரோனாவை சீனா விரைவாக கட்டுப்படுத்தியது எப்படி?



இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் மத்திய நகரான வூகானில் (Wuhan) விரைவாக பரவிய புதிய ரக கொரோனா வைரஸால் (கோவிட்-19) சீனர்கள் ஓர் அசாதாரண நிலையை அனுபவித்தார்கள்.

வழக்கமான நிகழ்வாகிய குடும்ப கொண்டாட்டம் நண்பர்களுடனான சந்திப்பு விருந்து உட்பட எந்த நிகழ்விலும் பங்கேற்க முடியாமல் வீட்டிற்குள் முடங்கியுள்ள அனுபவத்தை நினைத்து பார்த்தால் இந்த நொடியும் மனம் அஞ்சி நடுங்குகிறது. இரும்புக்கரம் கொண்டு அரசு எடுத்த நடவடிக்கைகளால் நோய் தொற்று கொண்டோரின் எண்ணிக்கை மார்ச் 10க்கு பின் தற்போது வெகுவாக குறைந்து விட்டது.

சீனாவில் ‘கோவிட்-19’ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் உலகில் வேறு பல நாடுகளில் இதன் தொற்று பரவ ஆரம்பித்துள்ளது. சீனாவிலுள்ள நான் நேரில் பார்த்த வைரஸ் தடுப்பு மற்றும் மீட்பு பணி அனுபவத்தை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் தொற்றின் துவக்கத்தில் இந்த வைரஸையும் நுரையீரல் அழற்சியின் காரணத்தையும் வைரஸ் பரவும் முறையையும் பற்றி நிபுணர்களுக்கு எதுவும் தெரியவில்லை. வைரஸ் விரைவாக பரவியது. பிறகு சீன அரசு அனுப்பிய நிபுணர்கள் குழு வூகான் நகரில் கள ஆய்வு செய்து குறுகிய காலத்தில் வைரஸின் ரகத்தை உறுதி செய்துள்ளது.

உடனடியாக அந்த தொற்று மூலத்தை தனிமைப்படுத்தும் விதமாக ஜன. 23ல் வூகான் நகரத்தை மூட சீன அரசு உத்தரவிட்டது. வூகான் நகருக்கு மருத்துவர்கள் மருத்துவ உபகரணங்கள் முதலியவை அனுப்பபட்டன. இது வூகான் நகர் மற்றும் அது சார்ந்த கூபெய் மாகாணங்களில் மருத்துவ வசதிகளின் குறைப்பாடுகளை சமாளிக்க பெரும் உதவியாக இருந்தது.

### 12 ஆயிரம் பேருக்கு உடன் சிகிச்சை

நோயின் தீவிரத்தை உணர்ந்து ஆயிரம் படுக்கைகள் கொண்டுள்ள ‘ஹோவ் ஷென் ஷான்’ (Huoshenshan) எனும் புதிய மருத்துவமனை 10 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது.

இம்மருத்துவமனைக்கான கட்டமைப்பு வசதிகள் முழுமையாக இணைய நேரலை மூலம் நாட்டு மக்களுக்குக் காட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் 24 மணி நேரத்தில் 14 தற்காலிக மருத்துவமனைகள் கட்டப்பட்டன. உடன் 12,000 நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

---

*சீனாவில் இருந்து* ***பேராசிரியை கிகி ஷாங்*** *(தமிழில் நிறைமதி) தலைவர், தமிழ்த் துறை, யுன்னான் மீஞ்சுப் பல்கலைக்கழகம்* (Yunnan Minzu University)

---

வைரஸ் தாக்கத்தின்போதும் நாட்டின் பிற பகுதியில் உள்ள அனைத்து மருத்துவர்களும் வூகான் நகரத்துக்கு பணிக்காக செல்ல தாமாகவே முன்வந்தது அவர்கள் தொழில் சார்ந்த நெறிமுறையை காட்டியது. மக்கள் அவர்களாக வீட்டிலேயே தங்கினர். வெளியே போக வேண்டிய நிலையில் முகக்கவசம் அணிந்து சென்றனர். இதுபோன்ற சுகாதார நடைமுறைகளை அரசுடன் இணைந்து மக்கள் முழுமையாக கடைபிடித்தனர்.

### என்ன சிகிச்சை முறை

கொரோனா வைரஸ்’க்கு தடுப்பு மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்கத்திய மருந்துகளை தவிர சீனப் பாரம்பரிய மருத்துவம் கொண்டு வைரஸ் தொற்றியவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்திய சித்த மருத்துவம் போன்று சீன மருத்துவத்திலும் தொன்மையான பல மூலிகைகள் உள்ளன. உதாரணமாக நிலவேம்பு வழக்கமாக குளிர்காய்ச்சல் போன்ற நோய்களை குணப்படுத்தும். சீனாவில் ‘கோவிட்-19’ நோயாளிகளுக்கு தயாரிக்கப்பட்ட சீன மருந்தில் அடிக்கடி பயன்படுத்தியுள்ள மூலப்பொருள் ‘பாதாமி’ விதை (Prunus armeniaca Linne var.ansu Maximowicz). தடுக்கும் காலத்தில் ‘அஸ்ட்ராகல்ஸ்’ (As tragalus) மற்றும் மீட்புக் காலத்தில் ‘போரியா’ (Wolfiporia Extensa) எனும் மூலிகைகள் பயன்படுத்தப்பட்டன.

மேலும் சீன மருத்துவத்தில் ‘மெரிடியன்’ என்ற வகை உடற் பயிற்சிகளை (Meridian Aerobics) மருத்துவர்கள் நோயாளிகளுக்கு கற்பித்தனர். இதுவும் நோயை விரைவாக குணப்படுத்த உதவியது.

### தடுப்பு பணியில் பொதுமக்கள்

மக்கள் கூட்டத்தை தவிர்ப்பதால் வைரஸ் தொற்றும் வாய்ப்பு குறையும். வைரஸ் கடுமையாக பரவிய பிறகு அரசு பல்வேறு வடிவங்களில் வைரஸின் கடுமை தடுக்கும் வழிமுறையை மக்களிடம் அறிவுறுத்தியது. ஒவ்வொரு நகரிலும்ஒவ்வொரு தெருவுக்கு ஒரு நிர்வாக அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்குக் கீழே கமிட்டி அமைத்து அணிதிரட்டல் மற்றும் வைரஸ் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது மிக முக்கியமானவை.

இக்கமிட்டி ஒவ்வொரு வரையும்

தனித்தனியே தொடர்பு கொண்டு சுகாதார நிலைமையை கேட்டறிந்தது. தடுப்புவழி முறையைக் கற்பித்தது. நாள்தோறும் குடியிருப்பு பகுதியில் மூன்று முறை கிருமிகளைஅழிக்கும் பணியில் ஈடுபட்டன. பாதிப்புக்குள்ளானவர் என்று சந்தேகத்திற்கு உரிய நபர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்தியது தொடர்பான பணிகளை அர்ப்பணிப்புடன் செய்தன. உதாரணமாக நோய் தொற்று பாதித்தோருக்கு தேவையான உணவுகளையும் அன்றாட பொருட்களையும் வாங்கி இக்குழு அனுப்பி சுகாதார நிலைமையை நாள்தோறும் கேட்டு அதை பதிவும் செய்து வந்தது. மக்கள் எல்லோரும் தாமாகவே வீட்டில் தங்கினர்.

குறிப்பாக புத்தாண்டு பழக்கங்களாக நண்பர்கள் வீட்டில் சேர்ந்து சாப்பிடுவது கூட்டங்களில் கலந்து கொள்வது போன்ற மக்கள் கூடும் நிகழ்ச்சிகளை முழுவதும் கைவிட்டனர். வெளியே போகும் போது தவறாமல் முகக்கவசம் அணிந்தனர். வரிசையில் காத்திருந்த போது ஒருவரிடமிருந்து ஒருவர் ஒரு மீட்டர் தூரம் இடைவெளி விட்டனர்.

**தடுப்புப்பணியில் தொழில்நுட்பம்**

சமீபமாக சீனாவில் இணைய தொழில்நுட்பம் விரைவாக வளர்ந்து வருகிறது. இது வைரஸ் தடுப்புப் பணியிலும் பெரும் பங்களிப்பு செய்தது. உதாரணமாக வீட்டில் தங்கியிருக்கும் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அன்றாட பொருட்களை எளிதாக இணையத் தளத்தில் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொருட்கள் தினமும் குடியிருப்பு பகுதியின் வாசலிலுள்ள சரக்கு சேமிப்பிடத்தில் அனுப்பப்படும். அங்கு சென்று பொருட்கள் வாங்கி விட்டு வீட்டிற்குக் கொண்டு போகலாம்.

**கை கொடுத்த பிரத்யேக 'ஆப்'**

பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அலைபேசி 'ஆப்' மூலமும் வைரஸ் பரவுவதைத் தடுக்கும் புதுமையான வழி கண்டுபடிக்கப்பட்டது. முதலில் அந்த 'ஆப்' (application) ல் தங்கள் பெயர் தொடர்பு எண் சமீபத்தில் பயணம் செய்த இடங்கள் சுகாதார நிலைமை முதலிய தகவல் நிரப்பி பதிவு செய்யவேண்டும். பிறகு ஒரு 'கியூ.ஆர்.' கோடு கிடைக்கும். குடியிருப்புபகுதிக்குள் நுழையும் போது அல்லது வாடகை காரைப் பயன்படுத்தும் போது அந்த 'கியூ.ஆர்.' கோடு காட்டி 'ஸ்கேன்' செய்ய வேண்டும். இதன் மூலம் அதில் நுழைந்தவர்களில் யாருக்காவது தொற்று இருந்தால் உறுதி செய்யப்பட்டு அவர்களைஎளிதில் கண்டுபிடித்தனர்.

மேலும் பெரிய தரவுகளின் மூலம் அருகில் எத்தனை பேர் தொற்றியவர்களாக இருந்தனர் தாம் தங்கும் இடத்திலிருந்து எவ்வளவு தூரம் அவர்கள் இருந்தனர் என்பதை உணர்ந்தனர். மின் வணிக வளர்ச்சியால் சீன மக்களுக்கு wechat அல்லது Alipay எனும் ஆப் மூலம் இணையத்தில் பணம் பரிமாற்றம் செய்தனர். பணத்தை தொட்டு நோய் தொற்றும் வாய்ப்பை இந்த நடவடிக்கைகள் குறைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்த வைரஸ் போராட்டத்தின் மூலம் உலக மக்களின் உயிர் மற்றும் எதிர்காலம் ஒன்றுடன் ஒன்று பின்னி பிணைந்திருப்பதை அறிய முடிகிறது. எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து ஒற்றுமையாய் சமாளிக்க வேண்டும் என்பதை உலகிற்கு எடுத்து சொல்லியுள்ளது. இந்த வகையில் பலநாடுகளிலிருந்து உதவிபெற்றுள்ள சீனா கைமாறாக விமானங்கள் மூலம் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை அனுப்பி வருகிறது.

மக்களை உருக்குலைத்து அசுர வேட்டையாடும் கொரோனாவை கட்டுப்படுத்திய சீனாவின் அனுபவம் பல நாடுகளுக்கு பாடமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழை நேசிக்கும் ஒரு தமிழ் பேராசிரியையாக தமிழர்களுக்கு இதை பகிர்வதை என் கடமையாக கருதுகிறேன்.

**நன்றி: தினமலர், மார்ச் 20, 2020**

# தோழர் அருளானந்தம் மறைவுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வாழ்ந்து வந்தவருமான தோழர் விசேந்தி அருளானந்தம் தமது 83ஆவது வயதில் 11.03.2020 அன்று காலமானார் என்பதைகவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான தோழர் அருளானந்தம், இளமைக்காலம் முதலே மார்க்சிச தத்துவத்தில் நம்பிக்கை கொண்டு செயல்பட்ட ஒருவராவார். கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்த பின்பும் தனது கொள்கையில் தொடர்ந்தும் உறுதியுடன் இருந்து வந்தார். வாசிப்பதில் பெரும் ஈடுபாடு காட்டிவந்த அருளானந்தம் தனது இருப்பிடத்தில் சிறந்த நூலகம் ஒன்றையும் பராமரித்து வந்தார்.

புலிகள் மிகப்பலமாக இருந்து புலம்பெயர் நாடுகளில் அவர்களது ஆதரவாளர்களால் மாற்றுக் கருத்துள்ளவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்த சூழ்நிலையிலும், இடதுசாரிகளின் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தனது வசிப்பிடத்தை தொடர்ந்து அச்சமின்றி வழங்கி வந்த உண்மையான ஒரு தோழர் அருளானந்தம்.

தோழர் அருளானந்தத்தின் மறைவுக்கு எமது புரட்சிகர அஞ்சலியைத் செலுத்துவதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு 'வானவில்' சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலகளாவிய நோய்ப் பேரிடரின் தாக்கத்திலிருக்கும் உலகம் சோஷலிசத்தை நோக்கித் திரும்புவதற்கு காரணங்கள் இருக்கின்றன. கட்டாயமாக மக்கள் அனைவருக்கும் அறிவியல் உணர்வு தேவை என்கிற நிலைதான் அது. அறிவியல் உணர்வு என்பது சோஷலிசத்தை நோக்கி எடுத்து வைக்கப்படும் முக்கிய அடியாகும். இந்த மாதிரி நேரத்தில் கொரோனா வைரசின் வீரியத்தை முறிக்கும் மருந்துகளாக பசுவின் சாணத்தையும் மூத்திரத்தையும் பரிந்துரைக்கும் இந்துத்வ வெற்றுக் 'கோட்பாடுகளை' மக்கள் வெறுப்புடன் பார்க்கிறார்கள். இந்த 'கோட்பாடுகளை' விற்பவர்களே இருமியவுடன் மருத்துவ மனைகளுக்கு ஓடுகிறார்கள் அல்லது அவர்களின் உறவினர்களால் மருத்துவ மனைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். இத்தகைய தருணங்களில் மூட நம்பிக்கைக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் அனுகுமுறைகளில் கட்டாய மாற்றம் ஏற்படுகிறது. இதனால் சோஷலிசம் என்கிற கருத்துக்கு ஆதரவான சூழல் உருவாகிறது.

**–பேராசிரியர் பிரபாத் பட்னாயக்**

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள்




**வ**லிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத்தர கோரி ஒரு சுழற்சி முறை போராட்டம் வன்னியில் முன் எடுக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றுவது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தாய்மார், தந்தைமார், மனைவிமார் மற்றும் பிள்ளைகள். இந்த போராட்டம் நான் உணர்ந்த வரையில் இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளையும் வேறு சிலரையும் மீட்டுத் தரும்படி இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமாகும்.

ஆயுத போராட்ட ஆரம்ப கட்டத்திலேயே விடுதலை இயக்கங்களுக்கிடையே மாற்று கருத்து கொண்டவர்கள், தலைமையை கேள்வி கேட்பவர்கள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தை குறிப்பிடலாம் என எண்ணுகிறேன் .

கல்லடி மைக்கல், 70களின்ஆரம்பத்தில் ஆயுத போராட்டத்தில் நம்பிக்கை வைத்து போராட புறப்பட்ட இளவல். இவர் வீட்டிலிருந்து இளைஞர்கள் சிலருடன் இணைந்து தமிழகம் சென்ற சில காலங்களிலேயே காணாமல் ஆக்கப்பட்டார். இவரை தேடி இவரது விதவை தாயார் பல இடங்களிலும் விசாரித்து கடைசியில் என்தந்தையிடமும் வந்து ஐயா எனது மகனை காணவில்லை. அவரது இருப்பிடம் அறிந்து கூறுங்கள் என வேண்டுகோள் வைத்தார். இந்த விதவை தாயார் வசதியானவர் அல்ல. நாளாந்தம் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியினருகே தனது சிறிய கடகத்தை வைத்து சிறுவர்களுக்கு தின்பண்டங்கள் மற்றும் பழங்கள் விற்று அந்த சொற்ப வருமானத்தில் தனது வாழ்நாளை கொண்டு நடத்தியவர். தனக்கு கிடைக்கும் சிறு வருமானத்தில் சேமித்து யாழ்ப்பாணம் மீண்டும் மீண்டும் வந்து தனது மகனைப் பற்றி அறிய முற்பட்டார்.

## அமிர்தலிங்கம் பகிரதன்

எனது தந்தையாரும் இயக்கத்துடன் தொடர்புகளுடைய ஒரு இளைஞரிடம் இவர் பற்றி விசாரித்து தகவல் தருமாறு கேட்டார். ஓரிரு மாதங்களின் பின்னர் அந்த இளைஞர் என் தந்தையிடம் வந்து கல்லடி மைக்கல் உயிருடன் இல்லை என்ற தகவலை கூறினார். அவர் இயக்கத்தினுள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் இல்லாமல் ஆக்கப்பட்டார் என தெரிவித்தார். இது நடந்தது 70பதின் ஆரம்பங்களில். அப்போது எந்த இயக்கமுமே ஆரம்பிக்கப்படவுமில்லை, பெயரிடப்படவுமில்லை. உரிமை போராட்டத்தில் ஈடுபாடு உள்ள சில இளைஞர்கள் ஆயுத போராட்டம் பற்றி சிந்தித்து அதை செயலில் கொணர முற்பட்ட காலம். தமிழ் நாட்டில் ஒரு கடற்கரை கிராமத்தில் இந்த இளைஞனின் முடிவுரை எழுதப்பட்டது.

பின்னர் இயக்கங்கள் பிரபலமடைந்து பெரிய அளவில் செயல்பட முற்பட்ட போது அதனுள்ளும் வெளியிலும் இருந்த இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர் , கொலை செய்யப்பட்டனர். இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பல இளைஞர்களை தனக்கு தெரிந்த வழிகளால் விடுதலை செய்ய உதவிய சிலர் கூட அரசாங்கத்துடன் உறவு கொண்டவர்கள் என கூறி கடத்தப்பட்டனர், பின்னர் அவர் தம் மனைவியரிடம் வெள்ளை சேலை வழங்கப்பட்டு சமிக்ஞையாக அவர்கள் உயிருடன் இல்லை என கூறப்பட்ட சம்பவங்களையும் நான் அறிந்துள்ளேன்.

ஆயுதங்கள் மவுனிக்கப்பட்டு யுத்தம் முடிந்த கையுடன் தமிழீழ விடுதலை புலிகளிலிருந்த பல போராளிகள், தளபதிகள், பெயர் பெற்றவர்கள் கூட இராணுவத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அழைத்து செல்லப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் திரும்பவில்லை எனவும் கூறப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் இவர்களையே நாம் “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்” என குறிப்பிடுகிறோம்.

இப்படியாக கையளிக்கப்பட்டவர்கள் சிலரை ஏற்றுக்கொண்டதாக இராணுவம் எழுதி கொடுத்து விட்டு அழைத்து சென்றதாகவும் சிலர் கூறுகிறார்கள். யுத்தம் முடிவடைந்து பத்து ஆண்டுகளின் பின்னர் இந்த இளைஞர்கள், நபர்கள் எங்கு உள்ளனர், எப்படி உள்ளனர் என்பது அவர்களது உறவினர்களிடம் நிலவும் மிகப்பெரிய கேள்வியாகும். அவர்களை திருப்பி தரும்படி பல உறவுகள் தொடர் உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர் இதில் வயது வேறுபாடு இல்லாமல் பல உறவினர்களும் பங்கு பற்றுகிறார்கள். தமது பிள்ளைகளை இழந்த தாய் தந்தையர் தமது அந்திம காலத்தில் அல்லாடுகிறார்கள், பலர் எந்த முடிவையும் பார்க்காமலேயே இயற்கையாக உயிரிழக்கிறார்கள். தமது பிள்ளைகளை இழந்த இவர்களது மன உழைச்சல் எதனுடனும் ஒப்பிட முடியாதது. இதுவே இவர்களின் வாழ்க்கை பயணம் முற்று பெறுவதற்கு ஒரு பிரதான காரணமாகும். இந்த பதிவின் போது இந்த ஆர்பபாட்டம், போராட்டம் மூன்று வருடங்களை கடந்து நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

அரச தரப்பிலிருந்து பல பதில்கள் காலத்திற்கு காலம் கூறப்பட்டுள்ளன. கடந்த நல்லிணக்க அரசாங்கத்தின் காலத்தில் அன்றைய பிரதமர் திரு ரனில் விக்கிரமசிங்கா அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யாரும் உயிருடன் இல்லை, அவர்கள் வரப்போவதுமில்லை எனக் கூறி

அவர்களுக்கு நட்ட ஈடு வழங்க தயாராக உள்ளதாகவும் அரச சார்பில் தெரிவித்தார். இதை யாரும், எமது தமிழ் அரசியல்வாதிகள் உட்பட கருத்தில் எடுத்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அண்மையில் புதிதாக பதவியேற்ற ஜனாதிபதி அவர்கள் உத்தியோகபூர்வமாக இவர்கள் யாரும் உயிருடன் இல்லை என அறிவித்தார். இதைவிட பலரும் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காவிடினும் கூட காலத்திற்கு காலம் மறைமுகமாக இதே கருத்தையே கூறி வந்துள்ளனர். இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் இந்த விடயம் பற்றி சரியான, தெளிவான கருத்தை முன்வைத்த போது பலரது சொல்லடிக்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட்டார்.

இந்த போராட்டத்தின் முடிவுதான் என்ன?. தம்மால் அதிகாரத்திடம், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்களை திரும்ப தரும்படி கேட்டு போராட்டம் தொடர்கிறது. அவர்கள் யாரும் இல்லை என அரசாங்கம் கூறுகிறது. அதன் அர்த்தம் அவர்களை மீள கையளிக்க முடியாது என்பதேயாகும். அப்போது அடுத்த படிதான் என்ன? தமது அன்பான தனயனை, பாசமிகு கணவனை, சகோதரனை, தந்தையை இழந்த இவர்களுக்கு என்னதான் பதில்? இந்த போராட்டத்தின் முடிவு தான் என்ன?

தேர்தல் பேரிகைகள் முழங்குகின்ற இந்த காலகட்டத்தில், "கோயபல்ஸ்" ஐயும் விஞ்சும் பொய்களை எல்லோரும் அள்ளி வீசும் இந்த காலகட்டத்தில் இந்த போராட்டமும் இந்த மக்களின் குரல்களும் அமிழ்ந்து இன்னமும் கேட்காமலேயே போகலாம்.

எனது தனிப்பட்ட கருத்தில் இந்த மக்கள் அரசியலுக்கு அப்பால் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். மாண்டவர் மீண்டதாக சரித்திரம் இல்லை என்ற உண்மையை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு, தூண்டுதல்களுக்கு அப்பால் தங்களதும் தங்களது உறவுகளினதும் வாழ்க்கையை வாழ தொடங்க வேண்டும். இந்த முப்பது வருட கால யுத்தத்தில் நாம் ஒரு சமுதாயமாக இழந்தவை எண்ணிலடங்காதவை. எமது கலாசாரத்தில் ஏற்பட்ட சீரழிவு மட்டுமல்ல, குடும்ப, சமூக உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் எத்தனையோ. இந்த கூற்றானது புலம் பெயர் மக்களுக்கும் பொருந்தும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஏதோ ஒரு வகையில் இழப்புக்கள் ஏறபட்டுள்ளது. காயம்படாத நெஞ்சங்களே இல்லை எனலாம். அந்த காயங்களுக்கு மருந்து அதை தொடர்ந்து கிளறி அந்த வேதனையில் தவிப்பதல்ல. இழப்புகளையும் வேதனைகளையும் ஏற்று கொண்டு அதை கடந்து செல்வதே. அப்படி நடக்காதவரை அந்த மக்களின் துயரம் தீரப்போவதில்லை. இதை உணர்ந்து நடந்தால் அது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு செய்யும் கைமாறாகவே நான் கருதுவேன். இந்த உறவினர்கள் அனைவரும் ஒரு மன சாந்திக்கும் சம நிலைக்கும் வருவதற்கு சமுதாயத்தின் எல்லா பகுதிகளில் இருந்தும் அவர்களுக்கு ஆதரவு வழங்க படவேண்டும். என்னை பொறுத்தவரை எமது புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும், மொத்த சமுதாயமுமே குரல் கொடுக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோள். இதிலிருந்து நாம் தவறுவோமாயின் எமது பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு நாம் பெருந்தீங்கு இழைத்தவர்களாவோம்.

**நன்றி: முகநூல்**

(இலண்டனில் வாழும் அமிர்தலிங்கம் பகீரதன் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தமிழரசு கட்சியினதும், தமிழர் விடுதலைக் கட்சியினதும் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் கனிஷ்ட புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது)

# கடற்படையினரின் கடத்தல் சம்பந்தமான வழக்கில் பிரித்தானியா தலையீடு செய்தது!

*முன்னாள் நீதிவான் கூறுகிறார்!!*

தான் கையாண்ட சில வழக்குகளில் சட்டமாஅதிபர் திணைக்களமும் குற்ற விசாரணைப் பிரிவும் முறைகேடான முறையில் தலையீடுகளை மேற்கொண்டதுடன், கடற்படையினர் கடத்தல் மேற்கொண்டதாகக் கூறப்படும் வழக்கில் பிரித்தானிய தூதரகமும் தலையீடுகளை மேற்கொண்டதாகவும், கொழும்பு முன்னாள் பிரதம நீதிவான் திலின கமகே கூறியிருக்கிறார்.

அரசியல் பழிவாங்கல் விசாரணைகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கும் போதே பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் முன்னாள் நீதிவான் திலின கமகே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.
ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த முன்னாள் நீதிவான் மேலும் கூறுகையில்:

போர் நடைபெற்ற காலத்தில் கொழும்பின் புறநகர் பகுதிகளில் ஆட்கள் கடத்தப்பட்ட சில சம்பவங்களில் கடற்படையினர் தொடர்புபட்டதாக கூறப்படும் வழக்கு தனது முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரிடமிருந்து முறையற்ற விதத்தில் தனக்கு ஆலோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்று வந்ததாகக் குறிப்பிட்டார்.

அந்தக் கடிதத்தில் அந்த வழக்கை எவ்வாறு கையாள வேண்டும் என பிரித்தானிய உயர் ஸ்தானிகர் தனக்கு ஆலோசனைகள் கூறியிருந்ததாகவும், அதற்குப் பதிலளித்து தான் எழுதிய கடிதத்தில், இலங்கை இப்பொழுதும் பிரித்தானியாவின் ஒரு குடியேற்ற நாடு அல்லவென்றும், எனவே இப்படியான ஆலோசனைகள் தேவையில்லையென்று குறிப்பிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

இதையடுத்து முன்னைய அரசாங்க காலத்தில் வெளிநாட்டு இராஜதந்திர தலையீடுகள் இலங்கையின் நீதித்துறையில் இருந்தது பற்றிக் கருத்துத் தெரிவித்த முன்னாள் கடற்படைத்தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான றியர் அட்மிரல் சரத் வீரசேகர, 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததின் நோக்கமே இலங்கையில் வெளிநாட்டு நீதிபதிகளின் போர்வையில் அந்நியத் தலையீடுகளை மேற்கொள்வதற்காகவே எனத் தெரிவித்திருக்கிறார்.

2015இல் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் 19ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது, அதை எதிர்த்து வாக்களித்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர என்பது குறிப்பிடத்தக்கது.

# தேனீக்கள் உலகின் பொக்கிசம்!



***தேனீக்கள் மட்டும் இந்த மண்ணில் இருந்து மறைந்துவிட்டால், மனிதன் வாழ்வதற்கு நான்கு ஆண்டுகளுக்கு மேல் மிச்சம் இருக்காது!*** என்று சொல்லியிருக்கிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

தேனீ… உலகின் மிக சுவாரஸ்யமான, நுணுக்கமான உயிரினம்.

தக்கனூண்டு சைஸில் இருக்கும் தேனீதான் உலகின் மிகச் சிறந்த மகரந்தச் சேர்க்கையாளர்.

தென்னை, வாழை, பூசணி, ஆப்பிள், பீச் போன்ற பல பழ வகைகள் காபி, ஏலக்காய், பருத்தி போன்ற செடிகள் மற்றும் உணவு தானியங்கள் எனப் பல கோடி மகரந்தச் சேர்க்கைகளுக்குக் காரணமாக இருக்கும் தேனீக்கள்தான், உலகின் 80 சதவிகித உணவுப் பொருள்களின் பெருக்கத்துக்கும் காரணம்.

தேனீயின் தகவல் பரிமாற்ற முறை, ஸ்கைப், வாட்ஸ்அப் முறைகளை விடத் துல்லியமானது. யானை, ஆமைகளுக்கு ஞாபகசக்தி அதிகம் என்போம். ஆனால்,அவற்றை விடவும் கூர்மையான ஞாபகசக்தி கொண்டவை தேனீக்கள்.

இதுபோல இன்னும் பல ஆச்சரியங்கள் அந்தத் தக்கனூண்டு உடம்பில் இருக்கின்றன. ஆனால், அதிர்ச்சி தரும் விஷயம். அந்தத் தேனீக்கள் இப்போது ‘அழிந்துவரும் உயிரினங்கள்’ பட்டியலில் இடம்பிடித்திருக்கின்றன. ஆம்… ‘உலகை உலுக்கும் செய்தி’ என்றால், நிச்சயம் இதுதான்.

ஒட்டுமொத்த மக்கள் தொகையாலும் பூமிக்கு விளையாத நன்மை, ஒரே ஒரு தேனீயால் விளையும். அந்த அளவுக்குத் தேனீயின் ஒவ்வொரு சிறகசைப்பும் பூமிப் பந்தில் பசுமைப் போர்வையைப் போத்துகிறது.

தேனீக்களின் ‘லை:ப்ஸ்டைல்’ பற்றி தெரிந்துகொண்டால்தான், அது காடுகளின் பெருக்கத்துக்கு எப்பேர்ப்பட்ட நன்மை விளைவிக்கிறது என்று புரியும்.

தேனீக்களின் வாழ்வியல் குணங்களைப் பற்றி கேட்டதும், சுவாரஸ்யமாகப் பட்டியலிட்டார் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சிகள் துறையைச் சேர்ந்த டாக்டர் எம்.ஆர்.ஸ்ரீனிவாசன்.

உலகத்தில் அஞ்சு வகை தேனீக்கள் இருக்கு. மலைத் தேனீ, இந்தியத் தேனீ, கொம்புத்தேனீ, இத்தாலியன் தேனீ, கொடுக்கில்லாத் தேனீ. இதில் இந்திய, இத்தாலிய மற்றும் கொடுக்கில்லாத் தேனீக்களைத் தான் மனிதர்கள் வளர்ப்பாங்க. மத்த தேனீக்கள் தானாகவே காட்டில் வளரும்.

ஒரு குடும்பத்தில் ஒரு ராணித் தேனீ, சில நூறு ஆண் தேனீக்கள், பல்லாயிரம் பணித் தேனீக்கள் (பெண்கள்) இருக்கும். இதில் ஆண் தேனீக்களுக்கு 90 நாள்களும், பணித் தேனீக்களுக்கு 70 நாள்களும், ராணித் தேனீக்கு இரண்டு வருடங்களும் ஆயுள்.

ராணித் தேனீக்களுக்கு முட்டையிடுவது மட்டும்தான் வேலை. ஆண் தேனீக்கு, ராணியோடு புணர்வதும் தேன் கூட்டைப் பாதுகாப்பதும் கடமை. மற்ற எல்லா வேலைகளும் பணித் தேனீக்கள் பொறுப்பு. உணவுச் சேகரிப்பு, தேன்கூடு கட்டுவது, தேனைப் பக்குவப்படுத்துவது, கூட்டைச் சுத்தமாகப் பராமரிப்பதுனு எல்லா வேலைகளையும் பணித் தேனீக்கள்தான் கவனிக்கும்.

தேனீக்களின் பொறியியல் அறிவு அபாரமானது. தேன் கூட்டை அறுங்கோண வடிவத்துல கட்டும். ஏன்னா, அப்பத்தான் ஒரு சென்ட்டிமீட்டர் இடத்தைக்கூட வீணாக்காம முழுசாப் பயன்படுத்த முடியும்.

ஆண் தேனீகளுக்குப் பெரிய அறுங்கோண செல், பணித் தேனீக்களுக்குச் சிறிய அறுங்கோண செல் வடிவத்தில் கூடு கட்டிட்டு, ராணித் தேனீக்கு சிலிண்டர் வடிவில் செல் கட்டும். கூட்டின் கட்டுமானம் திருப்தியாக இருந்தால் மட்டுமே, ராணித் தேனீ அதில் முட்டையிடும்.

பூக்களின் மகரந்தம், மதுரம்… இரண்டும்தான் தேனீக்களின் உணவு.

அப்போதைய பசிக்கு அப்போதே சாப்பிட்டுவிடும். அப்புறம் ஏன் தேன் சேகரிக்கிறது? குளிர் காலங்கள், பூ பூக்காத காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத்தான் தேன் சேகரிக்கிறது.

தேனீக்கள் தேன் சேகரித்துப் பதப்படுத்துவதுதான் உலகின் சிறந்த உணவுப் பதப்படுத்தும் தொழில்நுட்பம். தேன் தேடிச் செல்லும் பணித் தேனீக்கள், பூக்களின் மதுரத்தை உறிந்து தன் உடலில் இருக்கும் ‘தேன் பை’யில் சேகரித்துக் கொள்ளும்.

அந்த மதுரம் முழுவதும் செரிக்காமல், தேனீயின் வயிற்றில் இருக்கும் நொதிகளுடன் சேர்ந்து திரவமாக மாறிவிடும்.

கூட்டுக்குத் திரும்பி வரும் தேனீக்கள், கூட்டின் வாசலில் காத்திருக்கும் தேனீக்களிடம் அந்தத் திரவத்தை ஒப்படைக்கும்.

அதற்காக ஏப்பமிட்டு ஏப்பமிட்டு தேன் பையில் இருந்து திரவத்தை வெளியில் கொண்டுவந்து எதிர் தேனீயின் வாயில் கொட்டும். ஒரு தேனீ இப்படி 50 முறை கக்கினால்தான், ஒரு துளி தேன் சேரும்.

கூட்டைப் பராமரிக்கும் தேனீக்கள் அந்தத் திரவத்தைக் கூட்டின் ஓர் ஓரத்தில் இருக்கும் தேனடையில் கக்கி, அதில் இன்வர்டோஸ் எனும் நொதியைச் சேர்க்கும். பிறகு அந்தத் திரவத்தில் இருந்து நீர்த்தன்மை வற்றிப் போவதற்காக தன் இறகை ஆட்டி ஆட்டி ஆவியாக்கும். பிறகு தேனைப் பாதுகாக்க ஒருவகை மெழுகைப் பூசிவைக்கும். இத்தனை நடைமுறைகளுக்குப் பிறகுதான் நாம் சுவைக்கும் தேன் உருவாகும்.

தேன் எடுப்பவர்கள் கொஞ்சம் தேனை தேனிக்களுக்கு எனக் கூட்டில் விட்டுத்தான் எடுப்பார்கள். அதுதான் தேன்

சேகரிக்கும் தர்மம்! இந்த வேலை நடக்கும்போது ராணித் தேனீ அதை வேடிக்கை மட்டுமே பார்க்கும். இனப்பெருக்கக் காலத்தில் மட்டும்தான் அதற்கு வேலை வரும். அந்தச் சமயத்தில் வேகமாக ராணித் தேனீ உயரத்துக்குப் பறக்கும். அதை எந்த ஆண் தேனீ துரத்திப் பிடிக்கிறதோ, அதோடுதான் இணை சேரும் ராணி. புணர்ச்சி முடிந்தவுடன் ஆண் இறந்துவிடும். அதன் பிறகு ராணித் தேனீ முட்டையிட, முட்டையில் இருந்து வரும் தேனீக்களைப் பணித் தேனீக்கள்தான் வளர்ப்புத் தாயாக வளர்க்கும்!

தேன் சேகரிப்பதற்கான தகவல்களை தேனீக்கள் பகிர்ந்துகொள்ளும் முறை அட்டகாசமானது.

உணவுத் தேவை ஏற்படும்போது 'ஸ்கவுட்' ஆக சில தேனீக்கள் முன்னே சென்று பூக்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டுக் கூட்டுக்குத் திரும்பும்.

கூட்டில் உள்ள மற்ற பணித் தேனீக்களுக்கு ஸ்கவுட் தேனீக்கள், தாங்கள் கண்டுபிடித்த தோட்டம் அல்லது சோலை எந்தத் திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை நடனம் ஆடித் தெரிவிக்கும்.

இதில் இரண்டு வித நடனங்கள் உள்ளன. வட்ட நடனம் மற்றும் வாலாட்டு நடனம். வட்ட நடனத்தில் வட்டமிட்டு வட்டமிட்டு பூக்கள் இருக்கும் தொலைவை மட்டும் குறிக்கும்.

வாலாட்டு நடனத்தில் உயரப் பறந்து வாலை ஆட்டினால், சூரியன் இருக்கும் அதே திசையில் உணவு உள்ளது என்றும், கீழே பறந்து வாலை ஆட்டினால், சூரியனுக்கு நேரெதிர் திசையில் தோட்டம் உள்ளது என்றும் அர்த்தம். வாலை வேகமாக ஆட்டினால், சோலை அருகில் உள்ளது என்றும், மெதுவாக ஆட்டினால், தொலைவில் உள்ளது என்றும் அர்த்தம்.

சூரியன், சோலையின் திசை, தங்கள் கூட்டின் இருப்பிடம். இந்த மூன்றையும் சம்பந்தப்படுத்தி நடன அசைவுகள் இருக்கும். இந்த நுட்பமான நடன ரகசியத்தைக் கண்டுபிடித்த ஆஸ்திரிய ஸ்காலர் கார்ல்வான் ஃப்ரிஸ்-க்கு நோபல் பரிசு கொடுத்தார்கள்.

தேன் சேகரிக்கும் போது தேனீக்களின் காலில் ஒட்டிக்கொள்ளும் பூக்களின் மகரந்தம், அடுத்தடுத்து பூக்களின் மேல் உட்காரும்போது, விதவிதமான கூட்டணியுடன் பரவும்.

இதுதான் காடுகளின், சோலைகளின் பரவலுக்குக் காரணம். தேனீக்களை அதிகம் காடுகளுக்குள் தான் பார்க்க முடியும். காரணம், தேனீக்கள் இருக்கிற இடத்திலேயே இயற்கையாகவே அடர்ந்த காடுகள் உருவாகிவிடும்!

அழியும் உயிரினம் பட்டியலில் இடம் பிடிக்கும் அளவுக்கு தேனீக்களுக்கு என்ன ஆபத்து?

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேற்கத்திய நாடுகளில் தேனீக்கள் அழிந்துவரும் உயிரினங்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் உலகின் மூன்றில் ஒரு பங்கு தேனீக்கள் அழிந்துவிட்டன. அதாவது, தேனீக்களின் அழிவு சதவிகிதம் 42 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

இன்னும் இந்தியாவில் தேனீக்களுக்கு அந்த அளவுக்குப் பெரிய அபாயம் ஏற்படவில்லை. ஆனால், கூடிய சீக்கிரமே அந்த நிலைமை வரலாம்.

தேனீக்களின் இந்தப் பேரழிவுக்குக் காரணம், Colony Collapse Disorder – சுருக்கமாக CCD. அதாவது கூட்டில் இருந்து உணவு சேகரிக்கச் சென்ற பணித் தேனீக்கள் கொத்துக் கொத்தாகக் காணாமல் போய்விடும்.

ராணி மட்டும் கூட்டில் இருக்கும். பணித் தேனீக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒரு கட்டத்தில் இல்லாமலேயே போய்விட்டால், ராணித் தேனீ என்ன செய்வதெனத் தெரியாமல் குழம்பி, சீக்கிரமே இறந்துவிடும்.

இல்லையெனில் வேறுகூடு தேடிப் போய்விடும். பணித் தேனீக்கள் இப்படித் தொலைந்து போவதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது. செயற்கை உரம், பூச்சிக்கொல்லி, மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்.

செயற்கை உரத்தில் உள்ள நியோ நிக்டினாய்ட்ஸ் எனப்படும் வேதிப்பொருள், தேனீக்களின் நரம்பு மண்டலத்தைப் பாதித்து அவற்றின் நினைவுத்திறனை மழுங்கடித்துவிடும்.

இதனால் கூட்டுக்குத் திரும்பும் வழி மறந்துபோய் பறந்துபோய் அலைந்து திரிந்து இறந்துவிடும். மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களின் விதைகளை 'டெர்மினேட்டர் சீட்ஸ்' என்பார்கள். அதாவது, அந்தப் பயிர்கள் 'விதை தானியத்தை' உருவாக்காது. மலட்டு விதைகளைத் தான் உருவாக்கும்.

அப்படியான மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் மகரந்தத்தில் உள்ள புரோட்டீன் தேனீக்களிடம் செரிமானக் கோளாறுகளை உண்டாக்கி, ஒரு கட்டத்தில் தேனீக்களைக் கொன்றேவிடும்.

இப்படி விவசாயத்தில் 'வணிக லாபத்துக்காக' மனிதன் செய்த பல மாற்றங்கள் தேனீக்களை அழிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஐந்து வருடங்களாக விவசாய உற்பத்தி பெருமளவு குறைந்து வருவதற்குக் காரணம் தேனீக்களின் இறப்பு எனத் தெரியவந்தது. அதனால், அங்கு செயற்கை உரம், மரபணு மாற்றப்பட்ட விதைகள் போன்றவற்றைத் தடை செய்துவிட்டனர்.

வளர்ப்புத் தேனீக்களைப் பிடித்து வந்து தங்கள் வயல்களில் பறக்கவிட்டு மகரந்தச்சேர்க்கை உண்டாக்க முயற்சிக்கிறார்கள். பல லட்சம் தேனீக்களை அழித்த சுயநல மனிதனால், ஒரே ஒரு தேனீயைக்கூட உருவாக்க முடியாது.

இதை நாம் எப்போது உணர்வோம்? என்று வருத்தமாகச் சொல்கிறார் எம்.ஆர்.ஸ்ரீனிவாசன்.

## ஸ்பானிஷ் ஃபுளு (Spanish flu)

முதலாம் உலகப்போர் முடியும் சமயத்தில் கோடிக்கணக்கான மனித உயிர்களை கொத்தாக சுருட்டி சென்றது ஒரு கொடூர தொற்று காய்ச்சல். இந்த கொடூர வைரஸிற்கு ஸ்பானிஷ் ஃபுளு என்று பெயரிடப்பட்டிருந்தது. 1914 ஜூலை துவங்கி 1918 நவம்பர் வரை நடைபெற்றது முதலாம் உலகப்போர். பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒரு பக்கமும் ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் எதிர் பக்கமும் நின்று போரிட்டன. இந்த போரில் ஸ்பெயின் பங்கேற்காமல் நடுநிலையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தான் 1918 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகம் முழுவதும் திடீரென பரவத் தொடங்கியது, ஒரு வைரஸ் தொற்று. இந்த தொற்று நோய் எங்கு, எப்போது, எப்படி பரவ ஆரம்பித்தது என்பது குறித்த துல்லிய தகவல்கள் எதுவும் இல்லை. எனினும் முதலாம் உலக போரின் போது தணிக்கை செய்யப்படாத ஸ்பெயின் நாட்டுப் பத்திரிகைகள், போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பா முழுவதும் பரவிய நோயை பற்றிய விபரங்களை வெளியிட்டதால், இந்த நோய் ஐரோப்பாவிலேயே ஆரம்பித்து இருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

1918, 1919 ஆகிய 2 ஆண்டுகளில் உலகமெங்கும் கோரத்தாண்டவமாடிய இந்த வைரஸ் தொற்று நோயிற்கு கிட்டத்தட்ட 5 கோடிக்கும் அதிகமான மக்கள் பலியாகி இருக்கலாமென புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இந்த தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 20 சதவீதம் பேர் உயிரிழந்துள்ளனர்.

அப்போது பிரிட்டிஷாரின் ஆளுமையின் கீழ் இருந்த இந்தியாவையும் ஸ்பானிஷ் ஃபுளு, விட்டு வைக்கவில்லை. 1918 ஆம் ஆண்டு ஜூன் மாதம், இந்தியாவின் மும்பாய் நகரில்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# கொரோனா வைரஸ் சீனாவில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதல்ல!

*-இந்திய விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன்*

சீனாவின் ரகசிய ஆயுத ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து உயிரியல் போர் ஆயுதமாக தயரிக்கப்பட்ட கிருமி தவறுதலாக வெளியேறி பரவியதுதான் கொரோனா வைரஸ் என்ற புரளிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது சமீபத்திய ஆய்வு.

அமெரிக்காவின் 'ஸ்க்ரிப்ஸ் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்' என்ற நிறுவனத்தை (Scripps Research Institute) சேர்ந்த கிறிஸ்டியன் ஆண்டர்சன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவானது புகழ்பெற்ற 'நேச்சர் மெடிஸன்' ஆய்விதழில் நேற்று (March 17, 2020) வெளியாகியுள்ளது.

SARS-CoV-2 என்ற அறிவியல் பெயரைக் கொண்ட இந்த வைரஸின் மரபணுக்களை ஆய்வு செய்த நிபுணர்கள், அவை ஆய்வகத்தில் செயற்கையாகவோ அல்லது மரபணுமாற்றம் செய்யப்பட்டோ உருவாகவில்லை என்றும் இயற்கையில் பரிணமித்த புதிய இனப்பிரிவு என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த டிசம்பரில் சீனாவின் வூஹான் நகரில் மனிதர்களிடம் நோயை ஏற்படுத்தும் SARS-CoV-2 இனப்பிரிவைச் சேர்ந்த கொரோனா வைரஸ் தனது கைவரிசையை காட்டத் தொடங்கியது.

அப்போது முதல் 2020-ம் ஆண்டு மார்ச் 11-ம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 110 நாடுகளில் குறைந்தபட்சம் 1,21,564 நபர்களிடம் இந்த நாசகார கிருமி பரவி சுமார் 4,373 மனித உயிர்களை குடித்துள்ளது.

வூஹான் நகரில் வைரஸ் ஆய்வு நிறுவனம் உள்ளதால் கொரோனா வைரஸ் அங்கே இரகசியமாக தயாரிக்கப்பட்ட செயற்கை கிருமி என்ற புரளி எழுந்தது.

'ஏற்கெனவே நாம் அறிந்துள்ள வேறு கொரோனா வைரஸ் இனப்பிரிவுகளின் மரபணு தொடரோடு புதிய இனப்பிரிவை ஒப்பிட்டு பார்க்கும்போது SARS-CoV-2 இனப்பிரிவு வைரஸ் இயற்கையில் பரிணமித்த ஒன்று என தெள்ளத்தெளிவாக புலப்படுகிறது' என்கிறார்கள் ஆய்வாளர்கள்.




**கிரீடம் அணிந்த வைரஸ்**

பூனைக் குடும்பத்தில் பூனை, புலி என பல விலங்குகள் உள்ளதுபோல இந்த கொரோனா வைரஸ் குடும்பத்தில் மனிதர்களை தாக்கும் வைரஸ், பறவைகளை தாக்கும் வைரஸ், விலங்குகளை தாக்கும் வைரஸ் என பற்பல இனப்பிரிவுகள் உண்டு.

நுண்ணோக்கி வழியே பார்க்கும்போது கிரீடம் (கிரவுன்) போல அல்லது சூரியனை சுற்றி இருக்கும் ஒளிக் கதிர்கள் (கொரோனா) போல கூர்முனைகளைக் கொண்டு தென்படுவதால் கொரோனா வைரஸ் குடும்பம் என இதற்கு பெயர் ஏற்பட்டது.

நமக்கு தெரிந்த வரையில், மனிதர்களை தாக்கும் ஆறு கொரோனா வைரஸ்களில் 229E, NL63, OC43, HK01 ஆகிய நான்கும் ஆபத்து அற்ற உடல் உபாதைகளை ஏற்படுத்தும். MERS-CoV மற்றும் SARS-CoV ஆகிய இரண்டும் கிருமி தாக்கியவர்களில் சிலருக்கு மரணம் சம்பவிக்கும் அளவுக்கு நோயை ஏற்படுத்தும்.

ஏழாவதாக உருவானதுதான் இந்த SARS-CoV-2. எனவேதான், புத்தம் புதிதாக சமகாலத்தில் பரிணமித்த இனப்பிரிவு என பொருள்படும் 'நாவல்' என்ற அடைமொழியோடு 'நாவல் கொரோனா வைரஸ்' என பெயர் சூட்டப்பட்டது. இந்த வைரஸ் ஏற்படுத்தும் நோயின் பெயர்தான் கோவிட்-19.

**பூட்டும் வைரஸ்களின் கள்ளசாவியும்**

ஓம்புயிரிகளின் செல்களில் புகுந்து அந்த உயிரியின் செல் அமைப்பை பயன்படுத்திதான் வைரஸ்கள் இனப்பெருக்கம் செய்யும். எனவே எப்படியாவது ஓம்புயிரி செல்களுக்குள் செல்ல வைரஸ் துடிக்கும்.

ஓம்புயிரிகளின் செல்கள் தங்கள் கதவை திறந்து வைத்து வா வா என்று வைரஸ்களை அழைக்காது. செல் சுவர் கொண்டு வைரஸ்களை உள்ளே எளிதில் நுழைய முடியாமல் தடுத்து நிறுத்தும்.

ஆனால் கதவு பூட்டிய கோட்டை போல எல்லா நேரமும் செல்கள் இருந்துவிட முடியாது. செல்பிரிதல், செல் செயல்படுதல் போன்ற எல்லா இயக்கத்துக்கும் ஆற்றல் தேவை. பற்பல புரத பொருள்கள் தேவை. ரத்தம் எடுத்துவரும் புரத பொருள்கள், ஆக்ஸிஜன் போன்ற பொருள்கள் செல்களுக்கு வெளியில் இருந்து உள்ளே செல்ல வேண்டும். உள்ளே ஏற்படும் வேதி வினை காரணமாக உருவாகும் மாசுகளை அப்புறப்படுத்த வேண்டும். எனவே, செல்களின் சுவர்களில் கதவு போன்ற அமைப்பு இருக்கும். தேவை ஏற்படும்போது மட்டும் கதவு திறந்து வெளியே உள்ள பொருள் உள்ளே வரும், உள்ளே உற்பத்தியாகும் மாசுகள் வெளியேற்றப்படும்.

சரியான புரதப்பொருள்கள் வந்து சேரும்போது, அவற்றை செல்களின் சுவர்களில் பற்றி பொறுத்துவதற்காக கைப்பிடி போன்ற ஏற்பிகள் இருக்கும். அந்த புரதங்களின் ஒரு பகுதி சாவியின் வடிவில் இருக்கும். செல்சுவற்றில் உள்ள கதவு பூட்டின் உள்ளே இந்த சாவி வடிவம் நுழையும்போது கதவு திறந்து புரதம் உள்ளே செல்ல முடியும்.

பூட்டை உடைத்து திருடன் நுழைவது போல கள்ளச்சாவி போட்டு கதவை திறந்து வைரஸ்கள் உள்ளே நுழையும். ஒவ்வொரு பூட்டின் சாவியும் வெவ்வேறு வடிவில் இருக்கும் அல்லவா?

அதுபோல ஒவ்வொரு உயிரியின் பூட்டும் கைப்பிடியும் வெவ்வேறு வடிவில் இருக்கும். இதனால்தான், எல்லா வைரஸ்களும் எல்லா உயிரிகளின் செல்களிலும் புகுந்துவிட முடிவதில்லை. இதன் காரணமாகவே, மாட்டுக்கு நோய் ஏற்படுத்தும் வைரஸ்கள், பல சமயம் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதில்லை.

அதாவது ஒவ்வொரு வைரஸுக்கும் அதற்கு ஏற்ற ஓம்புயிரிகள் உள்ளன. தனது ஓம்புயிரி செல்களை பற்றி, துளையிட்டு புகுந்து செல்வதற்காக அந்த குறிப்பிட்ட வைரஸ்களுக்கும்

அதன் மேலுறையில் செல்களின் ஏற்பிகளை பற்றி பிடிக்கும் RBD புரதம் மற்றும் செல்சுவரின் கதவை திறக்கும் சாவி போன்ற அமைப்பு, புரதம் போன்ற சிறப்பு அமைப்புகள் இருக்கும்.

### மரபணு தொடர் வரிசை

தொற்றுநோய் பரவல் ஏற்பட்ட சில நாட்களிலேயே சீன விஞ்ஞானிகள் SARS-CoV-2 வைரஸின் மரபணு தொடரை வரிசை செய்து அனைத்து ஆய்வாளர்களும் ஆராய்ச்சி செய்யும் வண்ணம் பொதுவெளியில் வெளியிட்டனர். ஏற்கெனவே நடத்தப்பட்ட ஆய்வில், முதலில் ஒரே ஒரு மனிதருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டு அதன் பின்னர் அவரிடமிருந்து மற்றவர்களுக்கு பரவிதான் சீனாவில் தொற்றுநோய் பரவல் ஏற்பட்டது என்பது விளங்கியது.

ஏறக்குறைய பந்து வடிவில் இருக்கும் கரோனா வைரஸ்கள் மீது குறிப்பிட்ட புரதங்களால் ஆன கூர் முனைகள் உள்ளன. இந்த கூர் முனைகளைக் கொண்டே விலங்குகள் மற்றும் மனித செல்களை இந்த வைரஸ் பற்றிக் கொண்டு துளையிட்டு உள்ளே நுழைகிறது.

ஆண்டர்சன் மற்றும் அவரது சகப் பணியாளர்கள் SARS-CoV-2 மரபணு தொடரை ஆராய்ந்தபோது, இந்த வகை வைரஸ்களின் கூர் முனைகளில் மனித செல்களின் மீது உள்ள ACE2 என்ற ஏற்பியை பற்றிக்கொள்ளும் விதத்தில் ‘ஏற்பி பற்று’ புரதம் பரிணமித்துள்ளது என கண்டறிந்தனர். அதாவது ACE2 என்ற பூட்டை திறக்கும் சரியான சாவி SARS-CoV-2-டம் இருந்தது.

### ஒப்பீடு ஆய்வு

இந்த சாவியை ஏனைய SARS-CoV வைரஸ்களின் சாவியோடு ஒப்பிட்டு பார்த்தனர். புதிதாக உருவான SARS-CoV-2-ன் சாவி புரதம் ஏற்கெனவே SARS-CoV வைரஸ்களிடம் இருந்த சாவி புரதத்தைவிட ஆற்றல் குறைந்தது. செயற்கையாக உயிரியல் ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்றால் மேலும் ஆற்றல் கூடிய பற்று புரதத்தை தான் உருவாக்குவார்கள் ஆற்றல் குறைவான ஒன்றை அல்ல.

ஒருவேளை, செயற்கை SARS-CoV வைரஸை கிருமி யுத்தத்துக்கு தயார் செய்தால், அது ஏற்கனவே மனிதர்களை கொல்லும் மிகவும் கொடிய வகை வைரஸை அடிப்படையாக கொண்டு தான் அமைய வேண்டும். SARS-CoV-2-ன் அடிப்படை அமைப்பு ஏற்கெனவே மனிதரை தாக்கும் SARS-CoV வைரஸ்கள் போல இல்லாமல் அழுங்கு மற்றும் வவ்வால்களை தாக்கும் SARS-CoV வைரஸ்கள் போல அமைந்துள்ளது.

ஏற்கெனவே இருக்கும் கூர் கத்தியை மழுங்கடித்து போர் தளவாடங்களை தயார் செய்ய மாட்டார்கள் அல்லவா? அதன்படி பார்த்தால், SARS-CoV வைரஸ்களின் வீரியம் கூட இந்த நாவல் SARS-CoV-2 வைரஸ்"க்கு இல்லை.

SARS-CoV-2 கூர்முனையின் RBD பற்று புரதம் மற்றும் வைரஸின் அடிப்படை மூலக்கூறு வடிவம் இரண்டையும் சேர்த்து பார்க்கும்போது, செயற்கையாக ஆய்வகத்தில் உருவாக்கிய கிருமியாக இருக்க முடியாது என ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

### எப்படி உருவானது?

இரண்டு வகையில் இந்த நாவல் SARS-CoV-2 வைரஸ் பரிணமித்து இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். முதலாவதாக, வேறு விலங்குகளில் தொற்று ஏற்படுத்தும் வைரஸ் உருவாகி, பின்னர் மனிதர்களிடம் நோய் ஏற்படுத்தும் கிருமியாக பரிணமித்து பரவியிருக்கக் கூடும். இல்லையெனில், முதலில் நோயற்ற வடிவில் மனிதரிடம் பரவி, பின்னர் மனிதரிடம் பரிணமித்து நோய் ஏற்படுத்தும் கிருமியாக உருவாகியிருக்கலாம்.

வௌவால்களிடம் பரவும் SARS-CoV-2 வைரஸின் சாயல் இந்த கொரோனா வைரஸில் காணப்படுகிறது. எனவே, வவ்வால்களிடமிருந்து மனிதர்களுக்கு இது பரவி இருக்கலாம் என ஒரு கருத்து உள்ளது. SARS மற்றும் MERS வகை SARS-CoV கொரோனா வைரஸ்கள் இப்படி தான் முதலில் புனுகு பூனை மற்றும் ஒட்டகங்களில் முறையே உருவாகி பின்னர் மனிதரிடம் பரவியது.

எனினும், வௌவால்களிடம் நோய் ஏற்படுத்தும் அதே இனம், மனிதரிடம் நோய் ஏற்படுத்த முடியாது. எனவே இரண்டுக்கும் இடைப்பட்ட இனப்பிரிவு பரிணமித்து இருக்க வேண்டும். இதுவரை அப்படிப்பட்ட இனப்பிரிவு இனம் காணப்படவில்லை. எனவே, வௌவால்களிடம் உருவாகி மனிதனுக்கு இது பரவியது என தீர்மானமாக கூற முடியாது.

மாற்றாக நோய்விளைவிக்கின்ற திறன் அற்ற வகை வைரஸ் மனிதர்களிடம் பரவி, பின்னர் காலப் போக்கில் பரிணாமத்தின் காரணமாக, நோய் விளைவிக்கின்ற தன்மை கொண்ட இனப்பிரிவாக உருவெடுத்து இருக்கலாம். அழுங்கு எறும்புண்ணிகளில் இந்த சாயல் கொண்ட வைரஸ் உள்ளது. அந்த விலங்கிடம் காணப்பட்ட வைரஸ்களிலும், SARS-CoV-2 வைரஸ்களிலும் ஒரே வகை RBD அமைப்புதான் உள்ளது.

எனவே நேரடியாக எறும்புண்ணியிடமிருந்தோ அல்லது பூனை இன விலங்குகளிடம் இருந்தோ இந்த வைரஸ் மனிதர்களிடம் பரவி இருக்கலாம். மனிதர்களிடம் பரவிய பின்னர், பரிணாம படிநிலை வளர்ச்சியில் மனித செல்களை துளைத்து திறக்கும் ‘சாவி புரதம்’ பரிணமித்து தொற்றுநோயாக உருவாகியிருக்கலாம் என்கிறார்கள்.

இரண்டில் எது சரி என்பதை இப்போது நம்மிடம் உள்ள தரவுகளைக் கொண்டு இறுதி செய்ய முடியாது. தொற்று விளைவிக்க கூடிய திறனோடு விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியது என்றால் மறுபடி இந்த வைரஸின் வேறு ஒரு வடிவம் எதிர்காலத்தில் பரவி புதிய தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நோய் ஏற்படுத்தும் திறனற்ற வடிவில் மனிதர்களிடம் பரவி பின்னர், நோய் தன்மை கொண்ட வைரஸ் பரிணமித்துள்ளது என்றால் மறுபடியும் அதேபோன்ற நிகழ்வு ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு. எப்படி இந்த வைரஸ் உருவானது என்பதை கூடுதல் ஆய்வுதான் நமக்கு தெளிவுப்படுத்தும்.

**நன்றி: இந்துதமிழ், 19 மார்ச் 2020**

---

இப்போது ஏற்பட்டிருக்கும் உலகளாவிய கொரோனா பேரிடர் முதலாளித்துவ உலகமயமாக்கலின் யுகத்தில் இன்னும் வரப்போகும் இடர்கள் எப்படியிருக்கும் என்பதையே காட்டுகிறது. வரவிருக்கும் காலங்களில் விரைவாகப் பரவும் வைரஸ்கள் இலட்சக் கணக்கான மக்களை நூற்றாண்டில் ஒரு முறை மட்டுமல்லாது, அடிக்கடி பாதிக்கும் வாய்ப்புள்ளது.

**–பேராசிரியர் பிரபாத் பட்னாயக்**

# தோழர் நீர்வை பொன்னையன் நினைவாக



உலகையே கொடிய கொரோனா வைரஸ் என்ற உயிர்கொல்லி நோய் சூறையாடி வரும் நிலையில், இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆறு தசாப்தகால தூண்களில் ஒருவரும், முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் மூத்த செயற்பாட்டாளருமான தோழர் நீர்வை பொன்னையன் இன்று (மார்ச் 26, 2020) தனது 90ஆவது வயதில் இலங்கை தலைநகர் கொழும்பில் காலமாகிவிட்டார். அவருடன் எனக்கு 55 வருடகாலமாக இருந்த ஆழமான தோழமையும் நட்பும் காரணமாக அவரது இழப்பை ஈடுசெய்ய முடியாமல் எனது மனம் பரிதவிக்கிறது, நெஞ்சு கனக்கிறது. அதற்காகவே இந்தப் பதிவு.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர்தான் அவருடன் தொலைபேசியில் உரையாடியிருந்தேன். அவரின் அழைப்பின் பேரிலேயே அது நிகழ்ந்தது. அப்பொழுது சிறிதுநேரம் உரையாடிய அவர், ''கதைக்கேலாமல் களைப்பாகக் கிடக்குது. விபரமாகக் கடிதம் எழுதும், பதில் எழுதுகிறேன்'' என்று சொல்லிவிட்டு தொலைபேசியை அவரது வீட்டுக்கு வந்திருந்த தோழர்கள் இரத்தினம், கருணா, சிவபுத்திரன் ஆகியோரிடம் கொடுத்துவிட்டார்.

அவருக்கு கடிதம் எழுத வேண்டும் என நான் நினைத்திருந்தும் அது முடியாமலே போய்விட்டது. இனி எப்படி யாருக்கு எழுதுவது?

•

தோழர் நீர்வை பொன்னனையனை நான் முதன்முதலில் 1965இல் சந்தித்தேன். அப்பொழுது நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அங்கு நான் 1963ஆம் ஆண்டு எனது 15ஆவது வயதில் கற்பதற்குச் சென்றேன். அன்றிலிருந்து இடதுசாரிக் கருத்துகளுடன் பரிச்சயம் ஏற்பட்டது. நானும் என்னுடன் இருந்த சில மாணவத் தோழர்களும் நாமாகவே தீர்மானம் எடுத்து புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணையத் தீர்மானித்து அதன் யாழ்ப்பாண அலுவலகத்துக்குச் சென்றோம்.

அப்பொழுது அந்த அலுவலகம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த 'மொம்சாக் பில்டிங்'கில் 11F என்ற முகவரியில் இயங்கிவந்தது. அங்குதான் நீர்வை பொன்னையன் உட்பட தோழர்கள் மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம் உட்பட பலர் எமக்கு அறிமுகமானார்கள்.

## *சண்முகம் சுப்பிரமணியம்*

நாம் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த காரணத்தால் எமக்கு நீர்வை ஒரு எழுத்தாளர் என்றதும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக அவரது 'மேடும் பள்ளமும்' என்ற முதலாவது சிறுகதைத் தொகுதியை ஆவலுடன் பெற்று வாசித்தோம். அதுமட்டுமின்றி எமக்கு நீர்வையுடன் ஏற்பட்ட தொடர்பால் அப்போது எழுத்துலகில் பிரவேசித்து பிரகாசிக்கத் தொடங்கியிருந்த முற்போக்கு எழுத்தளர்களான டொமினிக் ஜீவாவின் 'சாலையின் திருப்பம்', கே.டானியலின் 'டானியல் கதைகள்', செ.யோகநாதனின் 'யோகநாதன் கதைகள்', யோ.பெனடிக்ற்பாலனின் 'குட்டி' போன்ற அவர்களது முதல் வெளியீடுகளையும் படிக்க முடிந்தது.

காலஞ்சென்ற பல தோழர்களை நினைக்கும் போது உயிருடன் இருந்த நீர்வையின் நினைவும் எப்போதும் வந்துபோகும். அவர் இறப்பதற்கு முதல்நாள் கூட, கனடாவில் வசிக்கும் தோழர் தவபாலனுடன் கதைக்கும் போது நீர்வையின் புத்தகச் சேகரிப்பு பற்றியும், அவர் இல்லாத காலத்தில் அந்தப் புத்தகங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றியும் உரையாடி இருந்தேன். அதற்குக் காரணம் அவர் சுமார் 60 வருட காலமாக பல பெறுமதிமிக்க புத்தகங்களைச் சேகரித்து வந்ததை நான் அறிவேன்.

இன்னொரு காரணம், அவரைப்போலவே நானும் ஒரு புத்தகப் 'பயித்தியம்'. யாழ்ப்பாணத்தில் 1963இல் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்த 'யாழ்.புத்தகநிலைய'த்தின் உருவாக்கத்தில் அவரது பங்களிப்பு முக்கியமானது. அதே புத்தக நிலையத்தில் 1972 முதல் புலிகள் அதை வலுக்கட்டாயமாக 1991இல் மூடும்வரை நானும் பணியாற்றியிருக்கிறேன்.

•

நாம் நீர்வையை முதன்முதலாகச் சந்தித்த வேளையில் அவர் கட்சியின் தலைமையில் செயல்பட்ட இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் வட பிரதேச முழுநேர பிரதிநிதியாகவும், கட்சியின் தலைமையிலான இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் வட பிரதேச தலைவராகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இவற்றின் நாளாந்த வேலைகளுக்காக அவர் தினசரி நீர்வேலியில் உள்ள தனது வீட்டிலிருந்து பஸ்சில் புறப்பட்டு யாழ் நகர் வந்து தனது கடமைகளை முடித்துவிட்டு இரவு 10.30இற்குச் செல்லும் கடைசி பஸ்சில் வீடு திரும்புவார். சில வேளைகளில் நானும் அவர் கூடச் சென்று அவர் வீட்டில் தங்கியிருக்கிறேன்.

எனது அரசியல் பிரவேசம் அவர் தலைமையிலான வாலிபர் சம்மேளனத்தில் இணைந்ததிலிருந்தே ஆரம்பமாகியது. அந்தக் காலத்தில் கட்சியில் இணைவதற்கு முன் வாலிபர் சங்கத்தில் இணைந்து இரண்டு வருடங்கள் உறுப்பினராக இருந்து செயல்பட்டிருக்க வேண்டும். அதன்பின்னர் கட்சியில் இணைவதற்கு ஏற்கெனவே கட்சி உறுப்பினர்களாக இருக்கும் இருவர் சிபார்சு செய்ய வேண்டும். என்னைச் சிபார்சு செய்தவர்களில் ஒருவர் நீர்வை என்பது எனது நினைவில் இன்றும் பசுமையாக உள்ளது. அதன்பின்னர் இரு வருடங்கள் கட்சியில் பரீட்சார்த்த நிலையில் இருந்து பின்னரே முழுமையான உறுப்பினராக முடியும்.

•

மிகுந்த போராட்ட குணமும், சுறுசுறுப்பும் கொண்ட நீர்வையின் காலத்தில்தான் வடக்கில் பல புரட்சிகரமான தொழிற்சங்கப் போராட்டங்கள் நடந்தன. இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் வேலை நிறுத்தம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம், வல்லை நெசவாலை தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம், மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம், பீடித் தொழிலாளர்களின் போராட்டம், சினிமா தியேட்டர் ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் என்பன கட்சியினதும், தனிப்பட்ட முறையில் நீர்வையினதும் சிறப்பான வழிகாட்டுதலில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களாகும்.

அதுமட்டுமின்றி, 1966 முதல் 1969 வரை வட பகுதியில் எமது கட்சியாலும், கட்சியின் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தாலும் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கும் சாதியமைப்புக்கும் எதிரான எழுச்சி மிக்கதும், வெற்றிகரமானதுமான போராட்டத்தில் நீர்வை அர்ப்பணிப்புள்ள ஒரு போராளியாக முன்னணியில் நின்று செயல்பட்டார்.

நான் எனது கல்வியைத் தொடர விருப்பமின்றி கட்சியின் முழுநேர ஊழியராக விவசாயிகள் மத்தியில் வேலை செய்வதற்குத் தீர்மானித்து 1966 ஜனவரியில் கிளிநொச்சிக்கு சென்று வாழத்தொடங்கினேன். அந்த நேரத்தில் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்த சில தொழிலாளர்களின் அழைப்பை ஏற்று அங்கு எமது தொழிற்சங்கம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்தோம். அந்தத் தொழிற்சங்கத்தை அமைப்பதில் தோழர் நீர்வை நேரடியாக வந்து எமக்கு வழங்கிய வழிகாட்டல் என்றும் மறக்க முடியாதது. அந்தத் தொழிற்சங்கத்தை ஆரம்பிப்பதற்காக நீர்வையும் நானும் இன்னொரு தோழரும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் ஒரு தொழிலாளர் கூட்டத்தை முடித்துக்கொண்டு ஆனையிறவுவரை கால்நடையாகவே நடந்து சென்றது என்றும் மறக்க முடியாத சம்பவம். இதிலிருந்தே நீர்வையின் திடசங்கற்பத்தை தெரிந்து கொள்ளலாம்.

இவை தவிர, அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான வியட்நாம் மக்களின் வீரம்செறிந்த போராட்ட காலத்தில் வட பகுதியில் வியட்நாம் மக்களுக்கு ஆதரவாக நடைபெற்ற அனைத்து நடவடிக்கைகளிலும், வேறு பல வெகுஜனப் போராட்டங்களிலும் நீர்வை எப்பொழுதும் முன்னணிப் போராளியாக நின்றார்.

தொழிற்சங்கப் போராட்டங்களில் மட்டுமின்றி, விவசாயிகளை அணிதிரட்டுவதிலும் அவர் முன்னோடியாக இருந்துள்ளார். எமது கட்சியின் தலைமையின் கீழ் இருந்த அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளனத்தின் கிளையொன்றை வட பகுதியில் முதன்முதலாக வவுனிக்குளம் – செல்வபுரம் குடியேற்றத்திட்டத்தில் ஆரம்பித்தபோது நீர்வை அதற்கு அக்கறையுடன் ஆதரவு வழங்கினார் என பிற்காலத்தில் நான் அறிந்தேன். வவுனிக்குளத்தில் ஏற்பட்ட அனுபவத்தை முன்வைத்தே தான் ‘உதயம்’ என்ற தனது சிறுகதைத் தொகுதியின் பிரதான கதையை எழுதியதாக பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறினார்.

நீர்வை முற்போக்கு எழுத்தாளராக இருந்த அதேநேரத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை வடக்கிலும் நாடு முழுவதிலும் கட்டியெழுப்பியதில் பெரும் பங்காற்றியுள்ளார். 1965இல் கட்சியினால் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ‘வசந்தம்’ கலை இலக்கிய மாத இதழை உருவாக்கியதிலும் நீர்வையின் பங்களிப்பு தலையாயது.

அதுமட்டுமின்றி, யாழ்ப்பாணத்தில் ‘நவயுகப் பிரசுரம்’ என்ற பெயரில் ஒரு வெளியீட்டு நிறுவனத்தை உருவாக்கி அதன் சார்பாக மாஓசேதுங்கின் சில கட்டுரைகளை தமிழில் சிறு பிரசுர வடிவில் வெளிட்டதிலும் தோழர் வி.ஏ.கந்தசாமியுடன் நீர்வையின் பங்கும் முக்கியமானது.

•

1960களின் பிற்பகுதியில் தோழர் பொன்னையனுக்கு திருமணம் நடந்தது. அதன்பின்னர் அவர் கொழும்பில் நீண்டகாலமாக வாழ்ந்துவந்த மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்காக அங்கு சென்றுவிட்டார். அங்கு வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்காக ஒரு தொழில் தேட வேண்டியிருந்தது. சிறிது காலம் கொழும்பிலிருந்த சீனத் தூதரகத்திலும், சீனாவின் செய்தி நிறுவனமான ‘சின்குவா’வின் கொழும்பு அலுவலகத்திலும் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அதன்பின்னர் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து சில வருடங்கள் பணிபுரிந்தார்.

கொழும்பில் அவர் தெகிவளையில் குவாரி வீதியில் 18ஆம் இலக்க வீட்டில் குடியிருந்தார். அந்த வாடகை வீட்டில் மனைவியின் குடும்பம் நீண்டகாலமாகக் குடியிருந்து வந்தது. பின்னர் அந்த வீட்டை அவர்கள் வாங்கி அதில் புதிய வீடொன்றைக் கட்டினர். அங்குதான் அவரது இரு மகள்களும் பிறந்தனர். நாங்கள் – குறிப்பாக தோழர் வி.ஏ.கந்தசாமி, நீர்வையின் ஒன்றுவிட்ட சகோதரரான எமது கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் தோழர் இ.வே.துரைரத்தினம், நான் ஆகியோர் – கொழும்பில் நடைபெறும் கட்சிக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக செல்லும் வேளைகளில் அவரது வீட்டில் தங்குவது வழமை. அதற்காக அவரது வீட்டு முன் அறை எப்பொழுதும் எமக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கு தங்கும் வேளைகளில் நீர்வை மட்டுமின்றி அவரது மனைவி, மாமியார், பிள்ளைகள், அவரது மைத்துனர் சண்முகரத்தினம் (ஆனந்தன்) ஆகியோர் எம்மை மிகுந்த அன்புடன் உபசரிப்பார்கள்.

கொழும்பில் நீர்வை வாழ்ந்த காலத்தில் கட்சி வேலையை விட கூடுதலாக முற்போக்கு எழுத்தாளர் சங்க நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தார். அதற்காக சங்கத்தின் முக்கிய நிர்வாகிகளான பேராசிரியர் க.கைலாசபதி, சங்கத்தின் செயலாளர் ‘பிரேம்ஜி’ ஞானசுந்தரம், நீர்வை பொன்னையன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, சுபைர் இளங்கீரன், காவலூர் இராசதுரை, சோமகாந்தன், கே.கணேஸ், சமீம் ஆகியோர் அடிக்கடி சந்திப்பதுண்டு. இந்தச் சந்திப்புகளில் சில சந்தர்ப்பங்களில் எனக்கும் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்ததுண்டு.

இந்தக் காலகட்டத்தில் 70களின் நடுப்பகுதியில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய ஒருமைப்பாட்டு மாநாடொன்றை வெற்றிகரமாக நடத்தியது. இந்த மாநாட்டில் அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க கலந்துகொண்டு சங்கம் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாகத் தயாரித்தளித்த 12 அம்சங்கள் அடங்கிய மகஜர் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். இந்த மாநாட்டில் முற்போக்கு அரசியல் கட்சிகளின் வாலிப முன்னணிகள் சார்பாக பேசிய அனுர பண்டாரநாயக்க (சிறீலங்கா சுதந்திரக் கட்சி), சரத் முத்தெட்டுவேகம (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி), வாசுதேவ நாணயக்கார (லங்கா சமசமாஜக் கட்சி) ஆகியோரின் வரிசையில் எமது இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக வாலிபர்

சம்மேளனத்தின் சார்பாகப் பேசுவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. எனக்கு இந்த வாய்ப்பை ஏற்பாடு செய்து தந்தவர்கள் கைலாசபதியும் நீர்வையும்தான். இந்த மாநாட்டை வெற்றிகரமாக்குவதில் நீர்வை உட்பட சங்கத்தின் அனைத்து தலைமை நிர்வாகிகளும் இராப்பகல் என்று பாராது பணியாற்றியதை நான் கண்கூடாகக் கண்டேன்.

அந்தக் காலகட்டத்தில் நீர்வை இலக்கிய வேலைகளில் அதிக நேரம் செலவழித்தாலும் எமது கட்சியின் நடவடிக்கைகளிலும் தவறாது பங்குபற்றி வந்தார். குறிப்பாக, 1972 யூலையில் எமது கட்சியில் மீண்டும் ஒரு பிளவு தோன்றியது. அதன்போது நீர்வை சரியான அணியைத் தேர்ந்தெடுத்து எமது பக்கமே நின்றார்.

இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றில் 1935இல் முதன்முதலாகத் தோன்றிய லங்கா சமசமஜக் கட்சியில் முதல் பிளவு நிகழ்ந்தது. அக்கட்சியின் தலைமையில் இருந்த பெரும்பான்மையோர் கட்சியின் வழிகாட்டும் தத்துவமாக ரொட்ஸ்கிசத்தை ஏற்பது என முடிவு செய்ததால் அதிலிருந்த மார்க்சிச – லெனினிசவாதிகள் வெளியேறி 1940இல் ஐக்கிய சோசலிசக் கட்சி என்ற அமைப்பை உருவாக்கினர். பின்னர் 1943 யூலை 03ஆம் திகதி அந்த அமைப்பை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றிக்கொண்டனர்.

பின்னர் 1964இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஒரு பிளவு உருவானது. அந்தப் பிளவு சோவியத் யூனியனில் குருசேவ் முன்னெடுத்த நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் காரணமாக உருவாகியது. அதன் காரணமாக உலகம் முழுவதும் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவுண்டபோது இலங்கை கட்சியிலும் அந்தப் பிளவு தோன்றியது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் நவீன திரிபுவாதத்தை ஆதரித்த வலது சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் காரணமாக மார்க்சிச லெனினிசவாதிகள் உருவாக்கிய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான பக்கத்திலேயே நீர்வை பொன்னையன் நின்றார்.

ஆனால் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த நா.சண்முகதாசன் பின்பற்றி வந்த இடது தீவிர – ஒருமுனைவாத நிலைப்பாட்டால் அவருக்கு எதிரான போராட்டம் கட்சிக்குள் நிகழ்ந்து வந்தது. கட்சி ஒருமைப்பட முடியாத நிலைமையில் கட்சியில் மீண்டும் ஒரு பிளவு 1972யூலையில் ஏற்பட்டது. சண்முகதாசனை நிராகரித்த கட்சியின் ஏகப்பெரும்பான்மையான உண்மையான



மார்க்சிச – லெனினிச மத்திய குழு உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும் 'இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)' என்ற பெயரில் புதிய கட்சியை உருவாக்கினர்.

இந்தக் கட்சியை பழைய கட்சியின் முன்னணித் தோழர்களான வொட்சன் பெர்னாண்டோ, மு.கார்த்திகேசன், டி.என்.நதுங்கே, ஏ.ஆரியவன்ச, ஹிக்கொட தர்மசேன, ஓ.ஏ.இராமையா, சாகுல் ஹமீட், வி.ஏ.கந்தசாமி, ஈ.ரி.மூர்த்தி, எச்.எல்.கே. கரவிட்ட போன்றவர்கள் வழிநடத்தினர். இந்தச் சந்தர்ப்பத்திலும் தோழர் நீர்வை பொன்னையன் சரியான நிலைப்பாடு எடுத்து தன்னை மார்க்சிச லெனினிச கட்சியுடன் இணைத்துக் கொண்டார்.

•

1977இல் ஜே.ஆர்.ஜெவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடமேறியதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது 1977 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் அரசாங்க ஆதரவுடன் இனவன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1983 வன்செயலைத் தொடர்ந்து தோழர் நீர்வை பொன்னையன் கொழும்பை விட்டு நீங்கி சில மாதங்கள் தனது சொந்த ஊரான நீர்வேலியில் குடும்பத்துடன் தங்கி இருந்தார். இந்தக் காலகட்டத்தில் பொது வேலைகளில் ஈடுபட்டதுடன், 'ரெட்பானா' என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் வலிகாமம் கிழக்குப் பிரதேச இணைப்பாளராகவும் பணியாற்றினார்.

திரும்பவும் கொழும்பு திரும்பிய நீர்வை, இன வன்செயலால் தாக்கப்பட்டிருந்த தனது தெகிவளை வீட்டை விற்றுவிட்டு வெள்ளவத்தையில் தொடர்மாடி குடியிருப்பில் ஒரு வீட்டை வாங்கிக் குடியேறினார். அன்றிலிருந்து அவர் இறக்கும்வரை அந்த வீட்டிலேயே வாழ்ந்தார். மீண்டும் கொழும்பு திரும்பிய பின்னர், 'விபவி' என்ற மாற்றுக் கலாச்சார அமைப்பின் தமிழ் இணைப்பாளராகவும், அந்த அமைப்பு வெளியிட்ட 'விபவி' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இந்தக் காலகட்டத்தில் அந்த அமைப்பின் சார்பாக நாடு தழுவிய ரீதியில் பல கருத்தரங்குகளையும், சிறுகதைப் போட்டிகளையும் நடத்துவதில் முன்னின்று உழைத்தார்.

இதேவேளையில் கைலாசபதியின் மறைவின் பின்னர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயலிழந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் நாங்கள் சிலபேர் ஒருநாள் நீர்வையின் வீட்டில் அவர் தலைமையில் கூடி ஆலோசித்து, 'இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கினோம். பின்னர் அது 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்' என்ற பெயராக மாற்றம் பெற்றது.

இந்த மன்றத்தால் கொழும்பில் சராசரியாக மாதம் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, வருடந்தோறும் மு.கார்த்திகேசன் மற்றும் க.கைலாசபதி நினைவுச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. அதற்குக் காரணம் தமிழ் மார்க்சியவாதிகளைப் பொறுத்தவரையில் அரசியலில் கார்த்திகேசனும், இலக்கியத்தில் கைலாசபதியும் முன்னோடி ஆதர்ச தோழர்களாக இருந்தார்கள் என்பதனாலாகும் அத்துடன், இந்த மன்றம் 50இற்கும் அதிகமான நூல்களையும் வெளியிட்டுள்ளது. இந்த நூல்களில் மிக முக்கியமானவை இலங்கையின் இடதுசாரி இயக்க முன்னோடிகள் பற்றிய நூலும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் 40 பேர் பற்றி வெளியிட்ட நூலுமாகும் இவைகள் இரண்டும் எதிர்காலச் சந்ததியினர்க்கான முக்கியமான வரலாற்று ஆவணங்களாகும். இவற்றை வெளியிடுவதில் தோழர் நீர்வையின் பங்பளிப்பு மகத்தானது. அவர் இல்லாமல் இந்த சாதனைகள் ஒருபோதும் நிறைவேறியிருக்காது.

இந்தக் காலகட்டத்தில் தோழர் நீர்வை பொன்னையன் ஏளாரமான சிறுகதைத் தொகுதிகளையும், கட்டுரைத் தொகுதிகளையும், மொழிபெயர்ப்பு நூல்களையும், நாட்டார் வழக்கியல் பற்றிய நூல்களையும் எழுதி வெளியிட்டார். மரணத்தை எதிர்நோக்கி இருந்த வேளையிலும் கூட தனது புதிய

சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இவை தவிர, தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அரசியல் – இலக்கிய – தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களை முன்வைத்து "நினைவலைகள்" என்ற நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். அந்த நூல் அவரது வாழ்க்கையை பன்முக ரீதியல் அறிந்து கொள்வதற்கான ஒரு வெட்டுமுகம் எனலாம்.

தான் எழுதுவதுடன் நிற்காது, மற்றவர்களையும் எழுதத் தூண்டுவது நீர்வையின் இன்னொரு சிறப்பாகும். உதாரணமாக, நான் 1965 முதல் (16 வயதில் முதல் சிறுகதை 'ஈழநாடு' வாரமலரில் வெளியானது)) சில சிறுகதைகளை எழுதி, அவை சில இதழ்களில் வெளிவந்த போதிலும், ஒரு தொகுப்பாக இதுவரை வெளிவரவில்லை. எனவே எனது சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட வேண்டும் என என்னுடன் உரையாடும் நேரங்களில் வலியுறுத்தி வந்தார். அத்துடன், 1995இல் புலிகளால் நிகழ்த்தப்பட்ட வலிகாம மக்களின் இடப்பெயர்வின் போது எனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவங்களை வைத்து நான் எழுதி அச்சேறாமல் இருக்கும் எனது நாவல் ஒன்றையும் வெளியிடும் அககறையில் இருந்தார். அவரது வலியுறுத்தல் காரணமாகவே நான் தொகுத்த தோழர் மு.கார்த்திகேசன் பற்றிய, "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்: நகைச்சுவை – ஆளுமை – தீர்க்கதரிசனம்" என்ற நூல் அச்சுருப் பெற்றது எனலாம். அதை அவர் இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தால் வெளியிட்டதுடன், தானே அதற்கு பதிப்புரையும் எழுதினார்.

இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் நடத்திய அநேகமான கருத்தரங்குகளும், நூல் வெளியீடுகளும், மதிப்புக்குரிய அமரர் ஹான்டி பேரின்பநாயகம் அவர்களின் புதல்வியான திருமதி செல்வி திருச்சந்திரனை பணிப்பாளராகக் கொண்டியங்கும் கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள 'பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன' மண்டபத்திலேயே நடந்து வந்துள்ளன. அதைச் செயல்படுத்துவதற்கு நீர்வையினதும் செல்வியினதும் பங்களிப்புகள் மறக்க முடியாதவை.

தோழர் நீர்வை பொன்னையன் இன்று எம்முடன் இல்லை. அவர் விட்டுச் சென்ற வெற்றிடத்தை இப்போதைக்கு யாருமே நிரப்ப முடியாது. பௌதீக ரீதியாக அவரது உடல் எம்மையும் இந்த உலகையும் விட்டு மறைந்துவிட்டது. ஆனால் அவரது வாழ்வும் பணியும் பற்றிய நினைவுகள் இந்த உலகைவிட்டு ஒருபோதும் மறையாது. அதேபோல அவருடன் எனக்கிருந்த 55 வருட உறவின் நினைவுகளும் எனது மனதைவிட்டு ஒருபோதும் நீங்காது. இந்த உறவின் ஒரு சிறு பகுதியையே இங்கு பதிவு செய்துள்ளேன்.

தோழர் நீர்வை பொன்னையனின் பெயரும் நினைவும் என்றும் நீடித்திருக்கட்டும்!

அவருக்கு எனது புரட்சிகர அஞ்சலிகள்!!

மார்ச் 26, 2020

# இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெறும் சம்பளங்களும் கிம்பளங்களும்!

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கட்சிகள் சார்பாகவும் தனிநபர்களாகவும் பலர் போட்டியிடுவதைப் பார்த்திருக்கிறோம். இப்படியானவர்களை அதற்கான காரணத்தைக் கேட்டால் நாட்டுக்காக, இனத்துக்காக, மொழிக்காக, மதத்துக்காக எனப் பல்வேறு காரணங்களை அள்ளி வீசுவார்கள். உண்மை அதுவல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்கும் சம்பளமும் வரப்பிரசாதங்களுமே அதற்குக் காரணம்.

இதோ அவர்கள் மாதாந்தம் பெறும் சம்பளமும் இதர சலுகைகளும் பற்றிய விபரங்கள்: இலங்கை ரூபாவில் –

சம்பளம்: 54,475

வாகனங்களுக்கான எரிபொருள்: 30,000

போக்குவரத்து செலவுக்கு: 10,000

பொழுதுபோக்கு செலவுக்கு: 10,000

கைத்தொலைபேசி: 2,000

ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத்திலும் பங்கேற்பதற்கு: 500

மின்சாரம்: இலவசம்

வீட்டுத் தொலைபேசி: இலவசம்

முதலாம் வகுப்பு புகையிரதப் பயணம்: இலவசம்

விமானப்பயணம் உறுப்பினர் உட்பட இருவருக்கு: 40 இலவசம்

இவைதவிர, ஒரு செயலாளர், வாகனம், விடுதி, கணினிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பன இலவசம்.

தவிர, தீர்வையற்ற வாகன இறக்குமதி, தொகுதி அபிவிருத்திக்கென கோடிக்கணக்கான பண ஒதுக்கீடு, மதுபான கடைகளுக்கும் மற்றும் சிலவற்றுக்கும் அனுமதி பெற்றுக்கொடுப்பதால் கிடைக்கும் கமிசன், இராஜதந்திர கடவுச்சீட்டில் உலக நாடுகளுக்கு சுற்றுலா செல்லும் வசதிகள், உறவினர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பு, இப்படியாக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஏராளமான சலுகைகள் உண்டு.

எதுவித கல்வித் தகைமையும் இல்லாவிடினும், பண பலத்தாலும் ஆள் பலத்தாலும் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக வந்துவிட முடியும். இப்படி இவர்கள் வந்து மாதாந்தம் இலட்சக்கணக்கில் 'உழைக்கையில்' பல்கலைக்கழகம் வரை சென்று படித்த ஒரு பட்டதாரி ஆசிரியர் பெறும் மாதாந்த சம்பளம் வெறும் 30,000 ரூபா மட்டுமே!

இப்பொழுது தெரிகிறதல்லவா ஏன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வருவதற்காக மக்களின் கைகால்களைப் பிடித்தும் வீராவேசமான பேச்சுகளை நிகழ்த்தியும் ஆலாய்ப் பறக்கிறார்கள் என்று.

ஆனால் இவர்களுக்கு வாக்களித்து அரியாசனம் ஏற்றும் அப்பாவி (சோணகிரி) மக்களுக்கு கிடைப்பது?

8ம் பக்கத்தொடர்ச்சி...

முதன்முதலாக இந்த கொடிய வைரஸ் காலடி எடுத்து வைத்தது. ஒரு மாதத்தில் சுமார் 1600 இற்கும் மேற்பட்டவர்களை காவு கொண்ட பின்னர் சற்று அடங்கி இருந்தது. பின்னர் 1918 செப்டம்பர் மாதத்தில் மீண்டும் மும்பாயில் அதி தீவிரமாக பரவியது. இதற்கு காரணம் முதலாம் உலகப் போர் வீரர்களுடன் திரும்பிய ஒரு பிரிட்டிஷ் கப்பல் இந்தியாவில் ஸ்பானிஷ் காய்ச்சலை மீண்டும் கட்டவிழ்த்துவிட்டதென கூறப்படுகிறது. முதலாம் உலகப்போரில் உயிர் பிழைத்த வீரர்கள் பலரும் தங்களுடன் கொடூர வைரஸை கப்பலில் எடுத்து வந்துள்ளனர்.

மும்பாயில் பல இலட்சக்கணக்கானோர் பலியாகினர். ஸ்பானிஷ் ஃபுளூவிற்கு 20 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களே அதிகம் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் கூறப்படுகின்றன. மும்பாயிலிருந்து பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களுக்கு ஸ்பானிஷ் ஃபுளூ பரவியது. குறிப்பாக ரயில் பயணங்களின் மூலமாக இந்தியாவின் பல பகுதிகளுக்கும் ஸ்பானிஷ் காய்ச்சல் பரவியுள்ளது. மகாத்மா காந்தியும் கூட இந்த காய்ச்சல் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளதாக தெரிகிறது.

அந்த காலகட்டத்து இந்தியாவானது பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பர்மா உள்ளிட்டவை அடங்கிய மிக பெரிய நாடாக இருந்தது. 1918 இல் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த கொடூர வைரஸின் உக்கிரம் அதிகமாக இருந்துள்ளது. 1919 ஆம் ஆண்டின் முற்பகுதிக்குள் ஸ்பானிஷ் ஃபுளூவிற்கு இந்தியாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 2 கோடிக்கும் அதிகம். அதே போல இந்த நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் பெண்கள் அதிகம் பலியான ஒரே நாடும் இந்தியா தான் என்று கூறப்படுகிறது.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

ஐக்கியப்பட்டு நின்று தம்மை நோக்கி வந்த துன்பத்தை எதிர்த்து நின்றனர். இறுதியில் வெற்றியும் பெற்றனர்.

இன்று வரலாறு தலைகீழாக மாறியுள்ளது. எந்த அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இந்த கொடூரமான நோயை வைத்து சீனாவை இழிவுபடுத்தவும் தனிமைப்படுத்தவும் முயன்றனவோ, அவையே தமது நாடுகளில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரசைக் கட்டுப்படுத்த சீனாவின் உதவிகோரி அதன் காலடியில் விழுந்துள்ளன. எந்த வூஹான் நகரை பழித்து ‘வூஹான் வைரஸ்’ என அழைத்தனரோ, அந்த நகரிலிருந்து உலகம் முழுவதும் கொரோனா வைரசைக் கட்டுபபடுத்துவதற்கான மருத்துவர்களும், மருத்துவ உபகரணங்களும் செல்கின்றன. இதன் மூலம் முதலாளித்துவ அமைப்பை விட சோசலிச அமைப்பே மேன்மையானது என்பதை சீனா மீணடுமொருமுறை நிரூபித்துள்ளது.

சீனா மட்டுமல்ல, இன்னொரு சின்னஞ்சிறிய சோசலிச நாடான கியூபாவும் இந்த கொரோனா வைரசைக் கட்டுப்படுத்துவதில் உதவி வருகிறது. இவ்வளவுக்கும் கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக கியூபா மீது மிலேச்சத்தனமான முறையில் அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்து வருகிறது. அமெரிக்காவின் இந்த அநியாயமான செயலுக்கு மேற்கத்தைய நாடுகளும் ஆதரவளித்து வருகின்றன. இருந்த போதிலும் கியூபா அரசியல் வஞ்சம் தீர்க்க எண்ணாது சோசலிசப் பண்பாடான சர்வதேசியத்துவ உணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் ஓடோடிச்சென்று மேற்கு நாடுகளுக்குக் கூட உதவி வருகின்றது.

இருந்தபோதிலும் ஏகாதிபத்திய குணாம்சம் ஒருபோதும் மாறாது என்பதற்கு உதாரணமாக அமெரிக்கா இருந்து வருகிறது. அமெரிக்கா இந்த உலகப் பேரழிவுத் தருணத்திலும் கியூபா, ஈரான், வெனிசூலா, வட கொரியா, சிரியா என்பனவற்றின் மீதான தனது பொருளாதாரத் தடையை நீக்க மறுப்பதுடன், மென்மேலும் புதிய தடைகளையும் விதித்து வருகின்றது. சீனாவிடம் உதவி கேட்டுக்கொண்டே சீனாவுக்கெதிரான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இருந்தபோதிலும், இந்தக் கொடிய நோய் உருவான சூழலில் உலக நாடுகள் ஒவ்வொன்றும் நடந்து கொள்ளும் முறையில் இருந்து உலக மக்கள் பல பாடங்களைப் படிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவையாவன:

உலகம் அழிந்தாலும் ஏகாதிபத்தியம் தனது இயல்பை மாற்றாது.

முதலாளித்துவ அமைப்பைவிட சோசலிச அமைப்பே மேன்மையானது.

சோசலிச நாடுகளே உலக மக்களைக் காப்பாற்றக்கூடிய ஆற்றலும் மனித நேயமும் உள்ளவை.

சகல முதலாளித்துவ நாடுகளிடமும் உள்ள விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு, ஆற்றல், வளங்கள் என்பவற்றைவிட தனியொரு சீனாவிடம் அதிகமாக உள்ளது.


இந்த நெருக்கடியான நேரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் எனப்படும் அமெரிக்காவிடமும் மேற்கு நாடுகளிடமும் உள்ள வளங்களும் ஆற்றலும் குறைவானவை என்பது தெட்டத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தப் ‘பெருமைப்பெரிய’ நாடுகளை விட எமது சின்னஞ்சிறிய இலங்கை இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் தனது பன்மடங்கு ஆற்றலையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

இயற்கைக்கு முன்னாலும் மனித ஆற்றலுக்கு முன்னாலும், மனிதனால் படைக்கப்பட்ட ‘தெய்வங்கள்’ ஆற்றலற்றவை என்பதும் நிரூபணமாகியுள்ளது.

மனித குலம் தான் கடந்து வந்த இலட்சக்கணக்கான வருடப் பாதையில் எத்தனையோ இடர்களை வெற்றி கொண்டு முன்னேறி வந்துள்ளது. அத்தகைய இடர்களில் ஒன்றே தற்போதைய நிலைமையும். எனவே இப்பொழுது மனிதர்களுக்குத் தேவை திடமான நம்பிக்கை ஒன்றே.

இன்றைய சூழலில் இன, மொழி, மத, வர்க்க, நாட்டு முரண்பாடுகள் எல்லாம் இரண்டாம் பட்சமானவை. கொரோனா என்ற இந்த கொடிய அரக்கனே இன்று எமது பிரதான எதிரி. மனிதனால் நேரடியாகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்டோ அல்லது மனிதன் இயற்கையைச் சீண்டியதினால் அதனால் உருவாக்கப்பட்டோ தோன்றியுள்ள அந்த எதிரியை அழித்து மனித இனத்தைக் காப்பதில் அனைத்து உலக மக்களும் ஒரே மனிதனாக அணி திரளுவதே இன்றைய தேவையாகும்.

இறுதி வெற்றி மனிதனுக்கே. மானிடமே வெல்லும்!



## த.பூ.முருகையா மாஸ்டர் காலமானார்!

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் புகழ்பெற்ற முன்னாள் கணித ஆசிரியரும், முற்போக்காளருமான த.பூ.முருகையா அவர்கள் 10.03.2020 அன்று தமது 85ஆவது வயதில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரில் காலமானார்.

கணிதம் கற்பிப்பதில் 1960களிலிருந்து இறக்கும்வரை புகழ்பெற்றிருந்த முருகையா மாஸ்டர், ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து செயல்பட்ட ஒருவராவார். பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளராகப் பணியாற்றினார். இக்காலகட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளராகவும் திறம்படச் செயலாற்றினார்.

வட பகுதியில் நடைபெற்ற இடதுசாரிகளின் செயற்பாடுகளிலும், ஆசிரியர்களின் உரிமைக்கான போராட்டங்களிலும் முருகையா மாஸ்டரின் பங்களிப்பு எப்பொழுதும் இருந்து வந்துள்ளது.

முருகையா மாஸ்டரின் மறைவுக்கு ‘வானவில்’ சார்பாக எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# அமெரிக்க தூதரகத்துடன் ஆலோசனைகள் நடத்தியது ஐ.தே.க. அரசு!

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு!!




முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதராலயத்துடன் இலங்கை சம்பந்தமான பல விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக முன்னாள் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறுகையில்:

பல்வேறு சந்தர்ப்பங்களில் துருக்கி அரசாங்கம் தமது நாட்டில் செயல்பட்டு வரும் FETO என அழைக்கப்படும் Gulen பயங்கரவாத இயக்கம் பற்றி இலங்கையை எச்சரித்திருந்த போதிலும், அந்த இயக்கம் பற்றி விசாரணை நடத்துவதை அமெரிக்கா விரும்பவில்லை எனத் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறிகையில், தான் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், துருக்கி அரசாங்கம் அளித்த தகவல் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பது என தாம் அப்போதைய வெளிவிவகார அமைச்சு செயலாளர் பிரசாத் காரியவாசத்திடம் வினவியதாகவும், அதற்கு அவர், இலங்கை பல்வேறு நாடுகளுடனும் சமமான உறவுகளைப் பேணி வருவதாகவும், அமெரிக்கா FETO இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக கருதவில்லை என்று பதிலளித்தாகவும் கூறியுள்ளார்.

2019 ஏப்ரல் 21இல் ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் தேவாலயங்களிலும் நட்சத்திர விடுதிகளிலும் இஸ்லாமிய பயங்கரவாத நபர்கள் சிலரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கையிலேயே முன்னாள் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க இத்தகவல்களை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து அவர் அங்கு மேலும் கூறியதாவது:

FETO இயக்கத்துடன் இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் தொடர்பு வைத்திருந்ததை தான் அறிந்திருந்ததாகவும், அதில் ஒருவர் அமைச்சர் ரிசாத் பதியுதீன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், துருக்கி தூதுவரும், அரசாங்கமும் தந்த தகவல்கள் குறித்து தான் ஜனாதிபதியின் செயலாளருக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவுக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பி வைத்ததாகச் சொன்னார்.

ஆணைக்குழு முன் சாட்சியமளித்த வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பிய மற்றும் ஆசியப் பிராந்தியத்துக்கான பொதுப்பணிப்பாளர் சிறியானி தம்மிக்க குமாரி சேமசிங்க கூறுகையில், FETO இயக்கம் சம்பந்தமாக துருக்கி அரசாங்கம் அளித்த தகவலின் அடிப்படையில் அந்த இயக்கத்துடன் தொடர்பு வைத்துள்ள இலங்கையர்கள் பற்றி இலங்கை அரச புலனாய்வுத் பிரினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு கிடைத்தது. அந்த அறிக்கையின்படி அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், காபிர் காசிம் ஆகியோர் அந்த அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பது தெரிய வந்தது என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், அதன் காரணமாகவே அதுபற்றி விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத்தான் ஊகிப்பதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இதில் அமைச்சர்கள் சமபந்தப்பட்டுள்ளதால் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டாமென வெளிவிவகார அமைச்சு செயலாளர் காரியவாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

---

முழுநாளும் வீட்டிற்குள் இருக்கும் மக்களுக்கு ஏற்படும் மனஅழுத்தமே, கொரோனா நோயை விடப் பெரும் கொடுமையாக இருக்கிறது. இதனால் குடும்ப வன்முறைகளும் அதிகரித்து வருவதாக பல உலக நாடுகளிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒரேநேரத்தில் சேர்ந்திருப்பதே இதுபோன்ற சண்டைகள் அதிகரிக்கக் காரணமாவதாக உளவியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். எதிர்காலம் பற்றிய பயமும், அதனால் ஏற்படும் மனஅழுத்தமுமே பரஸ்பரம் பரிமாறும் வார்த்தைகளில் சூட்டினை அதிகரிக்கச் செய்கின்றன. இந்த தகராறினால் அதிகம் குடும்பத்திலுள்ள குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். சமூக முடக்கம் முடிந்த பின்னரும் இந்த மாதிரியான சண்டைகள் நீடிக்கும் பட்சத்தில், கொரோனா வைரஸ் பாதிப்பை விட குடும்பங்களில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் உளவியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.